திராவிடநாடு

9—7—61 | வார வெளியீடு | விலை 16 காசு

# இலட்சியத் திருநாள்!

—[ சின்னு. இராமசாமி ]—

★

அண்டிட வந்தோர் ஆண்டிடக் கண்டும்
அடிமை களாய்நாம் ஆனது கண்டும்
எண்டிசை புகழும் இழிந்தது கண்டும்
இனியும் பொறுப்பது நியாயந் தானே?

அறுசுவை உண்போர் அங்கே!; உழைத்தும்
அறைவயிற் றுணவிலார் இங்கே! நாளும்
வறுமையில் வாடும் நிலையைக் கண்டும்
வாளா விருப்பது நியாயந் தானே?

திராவிடத் தோழா! திருப்பிப் பார்! நம்
தென்னவர் சரித்திர ஏட்டை! ஏதும்
இராத நாடா திராவிட நாடு?
எல்லாம் பெற்றது! எனினும் இன்றோ........?

கூட்டுப் புலியே! கொதித்துடன் எழுவாய்
குன்றசைக் குந்தோள் கொண்டே! திராவிட
நாட்டுப் பிரிவினைக்காக!; அதுவே
நமது "இலட்சியத் திருநாள்!" என்றே!

# வரியே, நீதான் காங்கிரசா?

—[ எ. கலைமுகிலன் ]—

வாழ்வை வளமாக்கத் திட்டம் தீட்டப்படுகிறதோ, இல்லையோ, வறுமையை வளர்க்க, வரியைப் பெருக்க, தீட்டுகிற திட்டம் பயன் பட்டு வருகிறது என்பது மட்டும் என்னவோ உண்மைதான். இதை யாரும் மறைத்துவிட முடியாது —மறுக்கவும் இயலாது! எடுத்துக் காட்டாக, ஏக இந்திய வாதிகள் கடந்த பதின்மூன்று ஆண்டுகளுக் குள்ளாக வரியென்ற பெயரிலும். வருமானம் என்ற பெயரிலும் சுருட் டிய வருவாயைக் காணுங்கள்:-

| நிதி திட்ட ஆண்டு | டில்லி ஆட்சியின் வரியும், வருமானமும் | | |
|---|---|---|---|
| 1947-48 | ரூ. | 179 | கோடி |
| 1948-49 | ரூ. | 372 | ,, |
| 1949-50 | ரூ. | 351. | ,, |
| 1950-51 | ரூ. | 411 | ,, |
| 1951-52 | ரூ. | 528 | ,, |
| 1952-53 | ரூ. | 430 | ,, |
| 1953-54 | ரூ. | 410 | ,, |
| 1954-55 | ரூ. | 454 | ,, |
| 1955-56 | ரூ. | 502 | ,, |
| 1956-57 | ரூ. | 589 | ,, |
| 1957-58 | ரூ. | 698 | ,, |
| 1958-59 | ரூ. | 711 | ,, |
| 1959-60 | ரூ. | 854 | ,, |

ஆண்டுதோறும் வருவாயைப் பெருக்க எண்ணி வரியைப் பெரு வாரியாக விதித்து, வாழும் வழி வகையற்றவாகளின் விழிபிதுங்க வைத்து, வாட்டி வதைத்துத் திட் டத்தின் பெயரால் வரியைப் பெற்று வந்தபோதும், வாழ்வு வளம்பெற் றதா, நலமுற்றதா? நாடு செழிப்புற் றதா, செல்வம் பெற்றதா? சீர் பெற்றதா, சிறப்புற்றதா? என்ருல், இல்லை. இல்லவே, இல்லை!

நாடு நலம் பெறவில்லை; நரம்புந் தோலுமான நடைபாதைவாசி களின் வாழ்வு மலரவில்லை; என் ருலும், திட்டத்தின் பெயரால், எழுப் பப்பட்டு அந்நிய நாடுகளிடம் கையேந்திப் பிச்சை ஏற்ப தும், யாசகம் கேட்பதும், மேலும் மேலும் வரிகள் விதிப்பதிலும் தவற வில்லை; குன்றவில்லை, குறைய வில்லை!

அந்நியக் கடன்–நிதியென்ற பெய ரில் ஏறத்தாழ 2,727 கோடி ரூபாய் களைப் பெற்றுக்கொண்டு வந்திருக் கிறது!

இவர்கள் எழுப்பிய கடனும், நிதி யும் 2, 727 கோடி ரூபாயுடன், கோலேந்திகளின் திருவிளையாடல் திருந்திவிட்டது என்று எண்ணி விடக்கூடாதே! என்பதற்காகத் தானே என்னவோ, மீண்டும் மூன்ரு வது திட்டத்துக்கென அந்நியக் கடன் மூலம் ரூ. 2,600 கோடியைப் பெறத் தீர்மானித்துள்ளனராம். இந்த 2,600 கோடி ரூபாய்கள் போதாது என்று வேறு கருதுகிருர்களாம்! எப்படி இருக்கிறது?

அந்நியக் கடன்களை எழுப்பியா வது இந்தியாவை அந்நிய நாடு களுக்கு அடகுவைத்துவிட்டுத், தலை யிலே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளட்டும் என்று எண்ணிஞ லும், "ஏ... ஏமாளியே! எலும்புக் கூடே! ஏழையே! இதோ, மூன்ரு வது திட்டம்; தா உன் பங்கை. ஏன் விழிக்கிருய்? திட்டம் நிறை வேற வேண்டாமா? நாங்கள் கொழு கொழுவெனக் கொழுத்துத் திரிய வேண்டாமா? நீ, சுருண்டு விழுந்து, துடிதுடித்துச் சாகவேண்டாமா? அதை நான் பார்த்துப் பரவசமடைய வேண்டாமா?" என்பதுபோல் மூன் ருவது திட்டத்துக்காக, ரூ. 1710 கோடிக்குப் புதிய வரிகளைச் சுமத்த முன்வந்திருக்கிறது, தில்லி ஏகாதி பத்திய ஆட்சி!

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் மூக்குடைந்துபோனது! இரண் டாவது திட்டத்தில் வயிற்றில் உதை விழுந்தது; அந்த வலி — ஏற்பட்ட வேதனை நீங்கவில்லை; மறையவில்லை —மாறவில்லை! அதற்குள் மீண்டும் வரியென்ற பெயரில் வருகிறது உதை அடிவயிற்றை நோக்கி!

வருகிற வரியெனும் உதையைத் தாங்கும் சக்தியற்று, வலிவற்று, கண்ணீர் வெள்ளத்தோடு காட்சி தரும் ஏழையின் நெஞ்சம் குமுறு கிறது! கொந்தளிக்கிறது! வெடிக் கும் எரிமலையாகிறது!

"காருண்யமூர்த்தி—ஏழை பங்கா ளர் — எளிமையின் சின்னம் — அண்ணல் காந்தியார் வளர்த்த காங்கிரசே! நீதான் வரியா? உன் பெயர்தான் காங்கிரசா? நீதான் ஏழையரின் பாதுகாவலஞ? ஏழைபங்காளஞ? உன் சொல்லை நம்பி நம்பி நாசமாக நாங்கள் என்ன, இன்னும் ஏமாளிகளா? உணர்ச்சியற்ற மரக்கட்டைகளா? ஏமாந்திருந்த் காலம் கடுகிவிட்டது; அறியாமை இருள் அகன்றுகொண் டிருக்கிறது! சுதந்திரச் சூரியன்— உதயசூரியன் கீழ்த்திசை கிளம்பி விட்டான்! இனி, நீ, தூள்! தூள்!!" என்று கனல்போல் கூறுகிற நிலைக் குத் தள்ளப்பட்டுவிட்டான், பாடுபட் டுப், பணத்தைத் தேடிக்கொடுத் தும் ஓடாகிவிட்ட உழைப்பாளி!

அந்த உழைப்பாளி சிந்திய கண்ணீர், கொட்டிய வியர்வை, கொடுத்த குருதி வரிப்புலியின் மறுப்பதிப்பாகிவிட்ட காங்கிரசுக்குக் கல்லறை எழுப்பப்போகிறது! அதற்கான காலம் நெருங்கிக் கொண்டு வருகிறது!

ஆகவே, ஆற்றல் மிக்கோரே! ஆர்வங்கொண்டோரே! ஆழியின் முத்தெடுத்தோரே! எடுத்த காரி யத்தை இடைவிடாது தொடுத்து முடிக்கும் தூய்மையான தொண் டுளம் படைத்தோரே! திரண்டு டெழுங்கள்! "திராவிடநாடு திரா விடருக்கே!" என்ற இலட்சிய முழக் கத்தை முழங்குங்கள்! இல்லங் களில் — இதயங்களில், கிராமங் களில், குக்கிராமங்களில், நாடு நக ரங்களில் உங்கள் குரல் ஒருமித்து ஒலிக்கட்டும்! கொள்கைமணம் கம ழட்டும்!! குணக்கேடர்தம் ஆட்சி முடியட்டும்!! அதற்கானவேலை இருக்கிறது, நிரம்ப! நாளிருக்கிறது குறைந்தே! இனியொரு தாமதம் வேண்டாம், இன்றே புறப்படு; செயல்படு! வெற்றி நமதே! நாளை யும் நமதே! புறப்படு, புறப்படு, புறநானூற்று மரபே, புல்லடிமைச் சேறு நீக்கிப் புதுவாழ்வு காண, "விடுதலைக் கொடி நெடுவனில் சூட" வெற்றி ஆரம் சூட விரைந் தெழுந்து வா!

# ஒற்றுமை பேச்சில் மட்டுளர்!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (9—7—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

பஞ்சாபிலே ஓரின மக்கள் மொழியின் அடிப்படையில் ஒன்றுபட்டுச் சீக்கியர் தலைவர் தாராசிங் தலைமையிலே அணிவகுத்து நின்று தன் மாநிலக் கோரிக்கைக்காகப் போராடியவண்ணமுள்ளனர். அதேபோன்று அசாம் மாநிலத்திலும் மலை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு மலைப் பகுதிகளைப் பிரித்துத் தரவேண்டும் என்று பலமாகப் போராடி வருகின்றனர்.

அவர்கள், தாம் வாழும் பகுதிகளை அசாமினின்றும் பிரித்து, கிழக்கு எல்லை மாநிலமாக அமைக்கும்வரை, ஒத்துழையாமைப் போராட்டம் நடத்தப்போவதாக, ஐந்தாவது அனைத்துக் கட்சி மலைத் தலைவர்கள் மாநாட்டில் பங்குகொண்டவர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

எந்தத் தேசிய உணர்ச்சியும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரிந்துபோகும் உரிமையுடன் ஒட்டிக்கொண்டு வாழும் அற்பசுகத்தை அடைவதற்குத் தயாராக அவர்கள் இல்லை. தங்களைத் துண்டித்துக்கொள்ளவே விரும்புகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட இனம் என்று வருகிறபோது அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், எத்தகைய அகில இந்திய அமைப்பின் அணிவகுப்பில் இருந்தாலும், அவர்களுடைய கருத்து முரண்பாடாகவே இருக்கிறது என்ற உண்மையை நாம் காணுகிறோம்.

வி. பி. சாலிகா அசாம் மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கிறார். அவருடைய ஆட்சியிலேதான் அசாம் மொழி ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டது. அந்த மாநிலத்தில் வாழும் வங்காளிகள் அசாம் மொழி ஆட்சி மொழியாவதைக் கடுமையாக எதிர்த்தனர். அசாமியுடன் தமது மொழியையும் அரியணை ஏற்றுமாறு வேண்டிக் கச்சார் மாவட்ட வங்காளிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதையொட்டி ஹெயில் கண்டி என்ற இடத்திலும் வேறுபல இடங்களிலும் படுகொலைகள் நிகழ்ந்தன. அந்தச் சூருவளி இன்னும் ஓய்ந்தபாடாகத் தெரியவில்லை.

இந்நிலையில் இந்தியத் துணைக்கண்டத்தின் சட்ட அமைச்சாராக இருப்பவர் திரு. ஏ. கே. சென் என்பவர்—இவர், வங்காளத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்க பட்டுச் சட்ட அமைச்சரானவர். இந்திய துணைக்கண்டத்து அரசியலில் மிகவும் செல்வாக்குப் பெற்றவர், இவருடைய குடும்பத்தினர் பலர் இந்திய துணைக்கண்டத்து ஆட்சியின் நிர்வாகத்தில் மிகப் பொறுப்புள்ள பதவிகளில் சிகரம்வைத்ததுபோல் இருக்கின்ற காரணத்தினுல் இவருடைய செல்வாக்கு இந்திய அரசியலில் குறிப்பிடத்தக்கதோர் அளவுக்கு இருக்கிறது.

அசாம் மொழித் தகராறு குறித்து அவர் கடந்த 30-ந்தேதி கல்கத்தாவில் உள்ள பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் "அசாமில் உள்நாட்டுச் சண்டை ஏற்படும்'' என்று அறிவித்திருக்கிறார். வங்காளமொழி ஆட்சிப்பீடத்தின் 'நிலையினைப் பெறவில்லையே என்ற இயற்கை உணர்ச்சி அவரை இவ்வாறு பேசச் செய்திருக்கிறது. தான் ஒரு காங்கிரஸ்காரர் என்றாலும், முதலிலே தான் ஒரு வங்காளி என்பதை அவர் மறந்துவிடத்தயாராயில்லை.

அதுகுறித்து அசாம் மாநில முதலமைச்சர் திரு. சாலிகர் ஜூலை 2-ஆம் நாள் ஷில்லாங்கில் பேசும்போது "திரு. சென் அவர்களுடையபேச்சு உள்நாட்டுச் சண்டையைத் தூண்டுவதாகவே இருக்கிறது.'' என்று குறிப்பிட்டிருக்கிறார். இவரும் காங்கிரஸ்காரர்தான்.

மேலும் அவர் பேசுகையில், "எனக்கு அவரிடத்தில் (சென்) இருந்து பதில் வந்திருக்கிறது. ஆனால். உள்நாட்டுச் சண்டைபற்றிப் பேசியது குறித்து அவர் ஏதும் மறுப்புக் கூறவில்லை.''

"அவருடைய பேச்சு உள்நாட்டுச் சண்டையைத் தூண்டுவதாகவேஇருக்கிறது என்ற இந்தக்கருத்தினைச், சட்ட அமைச்சர், தலைமை அமைச்சர் பண்டித நேருவுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட அமைச்சராக இருக்கும் ஒருவர் விரும்பத்தகாத இத்தகைய அறிக்கை ஒன்றினை விடுத்திருப்பதானது மிகவும் வருந்தக்கூடியதாகும்.''

என்று திரு. சாலிகா பேசியிருக்கிறார். இருவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள். இருவரும் அதே கட்சியின் சார்பில் ஆட்சிப்பொறுப்பினை மேற்கொண்டுள்ளவர்கள், என்றாலும் முரண்பட்ட கருத்துக்களை ஒருவருக்கொருவர் வீசி விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அதற்குக்காரணம். இருவரும் வெவ்வேறு இனத்தவர்கள் என்பதைத்தவிர, வேறொன்றும் இல்லை. இந்திய ஒற்றுமை அவர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை. ஆனால் தென்னகத்தில் மட்டும் திராவிடநாடு பிரிவினையைக் கோரும் நம்மைப் பார்த்து ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் கேலியும் கிண்டலும் செய்கிறார்களே ஒழிய, திரு. சென் அவர்களுக்கும், திரு. சாலிகா அவர்களுக்கும் உள்ளதுபோன்ற இன உணர்வு இவர்களிடத்தே காணமுடியாமற்போனதற்குக்காரணம், பதவிப் போதையின் விளைவாக ஏற்பட்டுவிட்ட அடிமைமனப்பான்மைத் தவிர, வேறொன்றும் இல்லை.

எனவே, இந்திய ஒற்றுமைக்கு இவர்கள் எவ்வளவு பாதுகாப்பான அரண் அமைத்தாலும் காலவேகத்தில் அது தவிடுபொடியாகப் போய்விடும் என்பதையே அசாம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பேச்சிலே ஒற்றுமையும் செயலிலே வேற்றுமையும் காட்டுமளவுக்கு அவர்கள் தங்கள் கட்சியையும் மறந்து காரியமாற்றுகிறார்கள் என்றால், இதற்குக் காரணம் என்ன? இன உணர்வுதான் என்பதை விளக்கத் தேவையில்லை,

○

# நடிக்கத் தெரியுமா?

[ மா. கி. தசரதன் ]

நடிக்கத் தெரியுமா உங்களுக்கு? தெரியும்என்றால் கவலையில்லை. தெரியாது என்றால் உடனே கற்றுக் கொள்ளுங்கள். எங்கே நாடகம்? என்ன வேடம்? என்றெல்லாம் கேட்கிறீர்கள், அல்லவா? நாடகம் இருந்தால்தான் நடிக்கவேண்டுமா, என்ன? இல்லை. சும்மா நடிக்கலாம். நாடகத்திலாவது கொஞ்சநேரம் தான் நடிக்கவேண்டும். ஆனால் வாழ்க்கையில் நீங்கள் எப்போதும் நடிக்கவேண்டும். ஆகவே உடனே நடிக்கத் தொடங்குங்கள். ஒத்திகை பார்க்கவேண்டாம், படுதா, விளக்கு, ஒலிபெருக்கி ஒன்றும் வேண்டாம். உடனே நடிக்கத்தொடங்குங்கள். இதெல்லாம் இருந்து நடிப்பதைவிட இது எவ்வளவோ சுலபமாகவரும். ஆகவே தளராமல் நடிக்கத்தொடங்குங்கள்.

'என்னவேடம்?' போட்டுக்கொள்ளுவது என்ற கவலை எழுகிறதா? எது வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். எத்தனையோ வேடங்கள் இருக்கின்றன. அத்தனை வேடங்களையும் போட்டுக்கொள்ளலாம்; போட்டுக்கொள்ளவேண்டும். ஒரே நேரத்திலா? ஆமாம்! ஒரே நேரத்தில்தான்! எப்படிமுடியும்? நாடகத்தில்கூட முடியாதே சினிமாவில்தானே அது இயலும் என்கிறீர்களா? கவலைவேண்டாம். ஒரே ஆள் பல வேடங்களைப்போட்டுக்கொள்ள முடியும். போட்டுக்கொள்ளுகின்றவர்கள்தான் வெற்றி பெறுகின்றார்கள்.

நீங்கள் 'நல்லவர்' வேடம்போடலாம், 'நண்பர்' வேடம்போடலாம். அதாவது நல்லவராக நடிப்பது; நண்பராக நடிப்பது. அதுதான் முக்கியம். வேறு எத்தனையோ வேடங்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டுக்காக இரண்டுசொன்னேன்; அவ்வளவுதான்!

அப்படியானால் நல்லவராக, நண்பராக நடித்தால் போதுமா? உண்மையிலேயே அப்படி இருக்கவேண்டாமா? என்றுதானே கேட்கிறீர்கள்? 'அப்படியெல்லாம் இருக்க வேண்டாம்' என்று நான் சொல்லவில்லையே! இருங்கள். நல்லவராக இருங்கள்; நண்பராக இருங்கள். உண்மையாக இருங்கள். ஆனால் அதோடுமட்டும் உங்கள் கடமை தீர்ந்தது என்று நினைக்கவேண்டாம். நீங்கள் நல்லவராக இருக்கிறீர்கள் நண்பர்களாக இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டும்; மற்றவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். உங்களுக்கு மட்டும் அது தெரிந்தால் போதாது. ஊராருக்கும் தெரியவேண்டும்.

அதை எப்படித் தெரிவிப்பது? நடிப்பின் மூலம்தான் முடியும். உண்மையைவிட நடிப்புக்குத்தான் வல்லமை மிகுதி. உண்மையாக அழுகின்ற பிச்சைக்காரனைக் கண்டு இரங்காத மனம், நடிப்பில் அழுகின்ற பிச்சைக்காரனைக் கண்டு இரங்குகின்றது. உண்மையான மகிழ்ச்சியில், வீட்டில் மனைவியிடம் மகிழாத மனம், நாடகத்தில், பொய்யாக வருவித்துக்கொள்ளும் நிகழ்ச்சியில்தான் மிகுதியாக மகிழுகின்றது; துள்ளுகின்றது. நடிப்புக்கு அவ்வளவு ஆற்றல் இருக்கிறது. உண்மையைவிட அதற்கு ஆற்றல் மிகுதி. அதனால்தான் நீங்கள் நல்லவர்களாக இருப்பதைவிட, நண்பர்களாக இருப்பதைவிட, நல்லவர்களாக நடிப்பதை, நண்பர்களாக நடிப்பதை ஊர் விரும்புகின்றது; உலகம் விரும்புகின்றது.

இது என்ன புதிய 'வேதாந்த'மாக இருக்கிறதே என்று மருளுகின்றீர்களா? உண்மை, முதலில் மருட்சியாகத்தான் இருக்கும். கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் தெரியும்.

நடிப்பும் ஒருவகை விளம்பரம் தான். நீங்கள், நல்லவர், நண்பர் என்று பிறர் எண்ணச் செய்வது நடிப்பு—விளம்பரம், ஆகவே அதைப் பழகிக்கொள்ள வேண்டாமா?

எனவே உண்மையாக இருக்க வேண்டும்; அது முக்கியம்; உண்மையாக இருக்கிறோம் என்பதைப் பிறருக்கு உணர்த்த வேண்டும்; அது அதைவிட முக்கியம்.

இதனை மேற்கு நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். வாழ்க்கையின் சிறுசிறு நிகழ்ச்சிகளில் எல்லாம், சிறுசிறு சடங்குகளை நடிப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள். அது வாழ்கையில் சுமையாக இல்லாமல் சுவையாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுகின்றார்கள்.

யாராவது எந்தச் சின்ன உதவி செய்தாலும் செய்தவர் எவ்வளவு கீழ் நிலையில் இருந்தாலும், அது அவரது கடமையாக இருந்து செய்தாலும் அதைப் பெறுகின்றவர் 'நன்றி' என்கிறார். ஒரு அலுவலக எழுத்தர் அலுவலகக் கடிதம் ஒன்றை எழுதித் தலைமை அதிகாரியிடம் கொடுத்தால், அந்த அதிகாரி கடிதத்தைப் பெற்றுக்கொண்டு 'நன்றி' சொல்கிறார். கடிதம் எழுதித் தர வேண்டியது அவர் கடமை தானே என்று இருமாந்து விடுவது இல்லை. விருந்தில், பானங்களை அருந்தும்போது குவளைகளை ஒன்றோடு ஒன்று மெல்ல உரசி ஒலித்து 'உங்கள் நலனுக்கு' என்று உபசாரமாகச் சொல்லிவிட்டு அருந்துகின்றனர்.

இவையெல்லாம் வெறும் நடிப்பு தான்; ஆனால் சுவையான நடிப்பு. தேவையான நடிப்பு — ஒருவகை விளம்பரம். இது நம்முடைய வாழ்வில் இல்லை. அது ஒரு குறை என்று எண்ண இடம் இருக்கிறது.

இரண்டு பல் உருளைகளை இணைக்கும் பொறியியல் வல்லுநர் இரண்டையும் இணைத்தபின் இடையில் ஒருதுளி எண்ணெய் இடுகிறார். எண்ணெய் இடாமல் உருளைகளை இயக்குவது இல்லை. இயக்கினால் அவை ஒழுங்காக உருளுவது இல்லை, ஒலிசெய்கின்றன; ஒடிந்து விடுகின்றன. ஆனால் ஒருதுளி எண்ணெய் இட்டால், அந்த எண்ணெய் இரண்டு உருளைகளையும் இணைத்து வேலைசெய்விக்கிறது.

'நடிப்பும்' அதுபோலவே வாழ்க்கையில் இருவர்க்கு இடையே எண்ணெய்போல விளங்கி இணைக்கிறது. உண்மை வேண்டாம் என்று பொருள் அல்ல, உண்மையோடு கூடிய நடிப்பு அதுதான் தேவை.

நாடகத்தில் நடித்தாலாவது நடிப்பு நன்றாக அமைந்தால் நாலு பேர் கைதட்டுவார்கள்; வாழ்க்கையில் நடித்தால் என்னவரும்? என்று எண்ணுகின்றீர்களா? நட்புவரும்; நன்மைவரும்; உறவுவரும்; உயர்வு வரும்; எல்லாமே வரும்.

ஆகவே நடிப்பதற்கு உடனே தொடங்கிவிடுங்கள். நன்மை கிடைப்பதைக் காணுங்கள்.

ஒரே ஒரு சொல்: இந்தக் கட்டுரையைப் படித்ததாக நடித்து என்னிடம் இதைப்பற்றிச் சொல்ல வேண்டாம்! ○

# கருப்பர் கனவு பலித்தது!

—[டி. எஸ். பி. ஐயாசாமி]—

விடுதலை பெறுவது சடுகுடு விளையாட்டல்ல நெடு நாளது தியாகப் பயணம்.

**சியராலியோன் விடுதலை** ஆப்ரிக்காவின் மேற்கு முனையிலே, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத் தொட்டதுபோல், குன்றுகளடர்ந்த குறுநிலம் நீக்ரோக்கள் வாழும் இருண்ட நாடு சியராலியோன் கடந்த மாதம் ஏப்ரல் 27-ஆம் நாள் ஆங்கிலப் பேரரசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. விடுதலை விழாவை எலிசபெத் ராணியாரின் உறவினர் கென்ட் கோமகனுர் சிறப்புற நடத்தி வைத்தார்.

இவ்விடுதலை விரல்விட்டெண்ணும் ஆண்டுகளிலே கிடைத்துவிடவில்லை. 1808-ஆம் ஆண்டிலிருந்து 1961-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து தளராது அயராது போராட்டங்களை நடத்தியே பெற்றிருக்கின்றனர். திடீரென உரிமைப் போரில் குதிக்கவில்லை. மெல்லமெல்ல ஆனல் உறுதியாக கொள்கை வலுவுடனே போரிட்டு வந்திருக்கின்றனர். வேட்டு முறையில் அல்ல வோட்டு முறையில்தான் தம் நாட்டை மீட்டனர். இதோ அவ்விடுதலைப் பாதையின் வீர அரிச்சுவடுகள்.

**1808-**ஆம் ஆண்டு, ஆங்கில முடி அரசின் கீழ் கவர்னர் ஆட்சிக்குக் கொணரப்பட்டது. கவர்னரின் உதவிக்கு ஒரு அட்வைசரி கவுன்சில் ஆங்கில அரசால் நியமிக்கப்பட்டது.

**1863-**ல் அட்வைசரி கவுன்சில் சட்ட மன்றமாக மாற்றி அமைக்கப் பட்டது. அதோடு செயற்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. விடுதலை வீரர்கள் சட்ட மன்றத்திலமர்ந்து நாட்டின் விடுதலை உணர்வைத் தட்டியெழுப்ப முயன்றனர். விடுவரோ பிரித்தாளும் வல்லமை பெற்ருேர்? பிடித்தனர் சிலரை. வீழ்ந்தனர் வலையில். "பாதுகாப்பு பகுதி" என்ற உள்நாட்டுக் குழப்பத்தைக் கிளப்பினர். (பாதுகாப்புப் பகுதி சியராலியோனில் ஒருபகுதி) மக்கள் கவனம் வேறுபக்கம் திருப்பப் பட்டது.

**1896-**ஆம் ஆண்டுவரை விடுதலை உணர்வு சற்று மங்கியது. ஆனல் மடிந்துவிடவில்லை. 1896-ல் "சியராலியோன்'' பாதுகாப்புப் பகுதி என்றும் குடியேற்றப் பகுதி என்றும் நிருவாகத் துறைக்காகப் பிரிக்கப் பட்டது.

பொங்கிவந்த விடுதலை உணர்வை பிரதேச உணர்வைக் காட்டிப் பிரித்துவிட்டனர். விடுதலை வேட்கையின் பலம் குறைந்தது. சக்திகள் சிதறின. உரிமைத் தீ அவிந்து விட்டதாகவே தோன்றியது. என்ருலும் நல்லோர் எல்லார் உள்ளத்திலும் அது கொழுந்துவிட்டெரிந்து கொண்டுதானிருந்தது.

**1896—1923.** 1863 லிருந்து 1896 வரை ஆட்சியாளரின் திருவிளையாடல்கள் கோலாகலமாய் நடந்தன. ஏன்? 1923 வரை சியராலியோன் இருளில் தள்ளப்பட்டுக் கிடந்தது. எனினும் வளைந்த முதுகினரை நிமிர்த்தவும், கோழையை வீரனுக்கவும் விவேகியாக்கவும், பேதங்கள் மறையவும் நாட்டின் ஒற்றுமை வலுப்பெறவும், தாயகத்தை உணரவும் தம் மொழிக் காக்கவும், விடுதலை உணர்வைப் பெருக்கவும் தலைவர்கள் அயராது பாடுபட்டு அவ்விடைக்காலத்தைப் பயன்படுத்தினர்.

**1924-**ல் சியராநாட்டின் முதல் தேர்வு நடந்தது. விடுதலை விரும்பிகள் கணிசமான இடங்களைப் பெற்றனர். சட்டமன்றம் கலகலத்துப் போயிற்று. இதைச் சரிகட்ட, சட்ட மன்ற அங்கத்தினர் எண்ணிக்கையை அதிகரித்தனர். அங்கே அதிகாரப்பூர்வமற்ற அங்கத்தினரை ஆளவந்தார் நியமித்துக்கொண்டனர். எண்ணிலடங்காதவர் எண்ணிடக் கூடியவரிடம் மடங்கினர். மிகப் பலர் மிகச் சிலரிடம் பாடம் கேட்டனர். வெளியே ஆளவந்தாரின் போக்குகளை மக்களறியும்படி செய்தனர். சட்டமன்றம் ஆட்சியாளரின் கைப்பாவை அவரால் ஆட்டிவைக்கப்படும் பொம்மலாட்ட அரங்கம், "மக்களால் மக்களுக்காக ஆளப்படுகிறது'' என்பதெல்லாம் வெறும் பேச்சு என மக்கள் உணரலாயினர். ஆட்சியாளர் சற்று இரங்கினர்.

**1943-**ல் செயற்குழுவில் இரண்டு ஆப்பிரிக்கர்களை அதிகாரபூர்வமற்ற அங்கத்தினராக நியமித்தனர்.

செயற்குழுவிற்கு சென்றவர் செயல்வீரராகவே திகழ்ந்தனர். தாங்கள் இருவரே ஆயினும் சூழ்ந்திருந்தோருக்கு இடையே துரும்பெனக் காணிடினும், மதித்திடினும் கொண்ட கொள்கையை மறந்தாரில்லை; "தாயகத்தின் விடுதலை'' ஒன்றே குறிக்கோள் என மூச்சும் பேச்சும் செயலுமிருந்தன. அதன் விளைவால்...

**1951**ல் சட்ட மன்றத்திலும் செயற்குழுவிலும் பல மாற்றங்கள் ஏற்படலாயின. புதிய சட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

**1953**ல் ஆறு ஆப்பிரிக்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

கோட்டைக்குள் புகுந்திட்ட அமைச்சர் குதூகலத்தால் நாட்டு விடுதலையை மறந்தாரில்லை. கிடைத்ததுபோதும், அதுவே நான் செய்த பாக்யம்; "யான் கண்ட இன்பம் அதுவே'' என்று முற்றுப்புள்ளியிட்டு மாற்ருன் மடியிலே சாய்ந்திடவுமில்லை. மக்களைச் சந்திக்கும் போதெல்லாம் "விடுதலை விடிவெள்ளி தோன்றிவிட்டது. விழித்தெழுவீர்; காரிருள் மறைந்தது கதிரொளி பரந்தது வாரீர் என கூவி அழைத்தனர்.

**1956**ல் சட்டமன்றம் பிரதிநிதிகள் சபை என மாற்றப்பட்டது. அவையினர் தேர்தல் மூலமும், பிரதிநிதிகளின் நியமனங்களின் மூலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆங்கில அரசுப் பிரதிநிதிகள் நியமனம் ஒழிக்கப்பட்டது.

**1958**ல் சட்டங்கள் மேலும் தேவைப்பட்ட அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டன. "விடுதலை கோரிக்கை'' சட்டமாக்கப்பட்டது.

**1960**ல் இலண்டன் மாநகரில் விடுதலைகோரி மாநாடு நடைபெற்றது. காமென்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் (நேரு உள்பட) சியராலியோன் விடுதலை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**1961**ல் ஏப்ரல் 27ம் நாள் அடிமை நாடு சியராலியோன் விடுதலைபெற்றது. சர் மில்டன் மார்கை அதன் பிரதமராக விளங்குகிருர்.

வாழ்க; வளர்க; வெல்க; சியராலியோன்.

சியராலியோன் நாட்டின்
அமைப்பு—பரப்பு—மக்கள் தொகை

குடியேற்றப் பகுதியும் பாதுகாப்பு பகுதியும் சேர்ந்து 27,925 ச. மைல்கள்.

மக்கள் தொகை 2,260,000.

சிராலியோனைச் சுற்றிலுமுள்ள கினியா, லிபியா நாடுகளுடன் பொதுத்தொடர்புள்ள 210 ச. மைல்கள் உள்ள கடற்கரைப் பகுதியையும் உள்ளடக்கியதாகும்.

1. குடியேற்றப் பகுதி மட்டும் 256 ச. மை.

மக்கள் தொகை 1,30,000 பேர்.

தலைநகர்: சுதந்திர நகர்.

2. பாதுகாப்புப் பகுதியின் பரப்பு: 27,669 ச.மை.

மக்கள் தொகை: 2,130,000 பேர்.

இதில் மூன்று மாநிலங்கள் அடங்கியுள்ளன. வடக்கு பாதுகாப்புப் பகுதி, தென்கிழக்குப் பகுதி, தென்மேற்குப் பகுதி எனப்படும்.

தென்மேற்குப் பகுதிக்கு 'போ'வும், வடக்கு பகுதிக்கு 'மாக்கீனியும்'; தென் கிழக்குப் பகுதிக்கு 'கெனிமாவும்' தலைநகர்களாக விளங்குகின்றன.

மண்டே, டெம்னே, என்ற மலை சாதியினர் 60 சதவீதமும், சில நூறு ஆங்கிலேயரும் சுமார் 2500 பேர் லெபனீசியரும் வாழுகின்றனர்.

ஆங்கிலம் தேசிய மொழியாக உள்ளது.

வெளிவந்துவிட்டது!

அண்ணா

அவர்களின்

கருத்தோவியம்

கப்பரசம்

(2-ம் பாகம்)

விலை 50 காசுகள்

விபரங்கட்கு:-

சுகுமாரன் பதிப்பகம்,

80, சி. எஸ். செட்டித் தெரு,

சின்னக் காஞ்சிபுரம்.

குறிப்பு:-விற்பனையாளர்கள் பிரதி ஒன்றுக்கு 0—12 காசுகள் கழிவுபோக முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். வி. பி. பி. கிடையாது.

# யார் காப்பார்?

—(கனகு)—

"ஏ, டபிள்!"

மரத்தோடு மரமாக ஆள் நிற்பது சாலையில் போவோர்க்குத் தெரியாத படி நின்றுகொண்டிருந்த காவற் சேவகர் கூவினார்.

விரைந்து போய்க்கொண்டிருந்த மிதி வண்டியின் பின்னால் அமர்ந்திருந்தவன் திகைத்துத் தடுமாறித், திடீரென்று இறங்கவும் முடியாமல், அமர்ந்திருக்கவும் முடியாமல் தத்தளித்து " நிறுத்து, நிறுத்து !" என்று கூச்சலிட்டான்.

மிதிவண்டியை இயக்கிக்கொண்டு போனவன் பரபரப்பும், படபடப்பும் மிகுந்து திடீரென்று 'பிரேக்' போட்டான். அவன் இறங்கும் முயற்சியை நிறைவேற்றுவதற்கு முன் அவன் ஆளுகையை மீறிக்கொண்டு, — திடீர் பிரேக் போட்டமையால்—சட் என்று நின்ற வேகத்தில் தன்மீது சவாரி செய்த இருவரையும் படீரென்று தூக்கி அப்பால் எறிந்துவிட்டு மிதிவண்டி தானும் பத்துப் பாகம் அப்பாற்போய் கடாமுடா என்று நொருங்கும் சத்தத்தோடு வீழ்ந்தது. வீழ்ந்த வேகத்தில் வண்டியின் கைப்பிடி வளைந்தது; உட்காருமிடம் (சீட்) முறிந்து தனியாகத் துண்டித்துக்கொண்டுவிட்டது.

தூக்கி யெறியப்பட்ட இருவரும் முழங்கால், முழங்கை, மார்பு, முகம் முதலியவை அடிபட்டு, நன்றாகச் சிராய்ப்புக் கண்டு எழ முடியாமல் சற்று நேரம் அப்படியே வீழ்ந்த இடத்தில் கிடந்தார்கள். வண்டியை இயக்கிக்கொண்டு போனவன் முயன்று மெல்ல எழுந்தான். அவன் நன்றாக எழுந்து நின்றுகொள்வதற்குள் காவற்சேவகர், அவர்கள் அருகில் வந்துவிட்டார். இருவரின் தவிப்பையும், மிதி வண்டியின் நிலையையும் கண்டு அவர் பரிதாபப்பட்டு வருந்தினார். எழ முயன்றவனை அணுகி அவனைத் தூக்கி நிறுத்தினார். பிறகு, எழ முடியாமல் அப்படியே கிடந்தவனை — மிதி வண்டியின் பின்னால் அமர்ந்து வந்தவனை— அணுகி அவனையும் தூக்கி நிற்க வைக்க முயன்றார், "பாவம் நன்றாக அடிபட்டுவிட்டதா? எழுந்து நில்!" என்றார் பரிவுடன்,

"அவனுக்கு எழுந்து நிற்க முடியாதுங்க. கால் ஊனமுங்க!" என்றான் முதலில் எழுந்துகொண்டவன்.

பாவம், அந்தக்கால் ஊனக்காரன் வீழ்ந்து கிடந்த நிலையிலிருந்து எழ முயன்று தரையில் உட்கார்ந்து கொண்டான்.

"ஏனப்பா, டபிள் வருவது சட்ட விரோதமென்று தெரியாது? பார், இப்போது நீங்களும் விழுந்து நன்றாக அடிபட்டுவிட்டது. உங்கள் வண்டியும் நொருங்கிப்போய்விட்டது.

"இல்லீங்க, நீங்க நிற்கிறதை நான் கவனிக்கல்லே. நீங்க சத்தம் போட்டதும் பயந்துபோய்த் திடீர் பிரேக் போட்டுட்டேன்."

"ஏன் பயப்படணும்? ஏன் திடீர் பிரேக் போடணும்? நீங்க செய்யறது சட்ட விரோதம் என்பதாலேதானே! — அதனாலேதான் மறைமுகமாகக் கூடச் சட்ட விரோதமா நடந்து கொள்ளக் கூடாதுன்னு சொல்றோம்!"

"சட்டவிரோதம்தானுங்க. இராத்திரி வேளை. பின்னால் வந்தவனுக்கு நடக்கமுடியாது. இந்த நேரத்திலே மோட்டாரும் கிடைக்காது. அதனாலே இப்படி டபிள் வந்தோமுங்க."

"சரி, உங்க மேலே வழக்குப் பதிவு செய்யறேன். செய்யத்தான் வேண்டியிருக்கிறது. உங்கள் முகவரியைச் சொல்றீங்களா?"

"இந்தத் தடவை மட்டும் மன்னிச்சு விட்டுடுங்க! இனிமேல் இந்த மாதிரி போகமாட்டோமுங்க."

காவற் சேவகர் யோசித்தார். சற்றுநேரம் ஒன்றும் சொல்லாமல் நின்றார்.

அப்போது சற்றுத் தொலைவில் ஊர்தியொன்று வேகமாக வந்தது. அது வந்த வேகத்தில் எதிரே வந்த மாட்டு வண்டியை — ஒரு பக்கத்து மாட்டை-உராய்ந்துகொண்டு விலகி வந்தது. அதுமட்டுமா? இடப்பக்க

மாய்விலகவில்லை, வலப்பக்கமாகவில்லை கிக் கடந்தது. ஊர்தியால் உராயப் பட்டுக், காயம் அடைந்து, மருட்சி கொண்டுவிட்ட மாடு திடுதிடு வென்று வண்டியைப் பாட்டையின் ஒரு புறத்துக்கு — பள்ளமான பகுதிக்கு இழுத்துக்கொண்டுபோய் விட்டது. வண்டிக்காரன் வாயில் வந்தபடி உரத்து எதை எதையோ சொல்லியவண்ணம் தன் வல்லமை எல்லாம் காட்டி, மாட்டை அமைதிப் படுத்தி, வண்டி குடைசாயாமல் பார்த்துக்கொள்வதற்குள் செத்தோம், பிழைத்தோம் என்றாகிவிட்டான்.

வண்டி குடைசாய்ந்திருந்தால் மாடுகள் செத்திருக்கும். வண்டிக்காரன் உயிர் துறந்திருப்பான். அவ்வளவு பெரிய பள்ளம் — அருகில்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தொலைவில் இந்தக் காவற் சேவகர் நின்றார். ஊர்தி தன்னை நெருங்கிவந்தபோது நிறுத்தச் சொல்லி கைகாட்டினார். ஊர்தி நின்றது.

"சார், நீங்க, 'ராங்' சைட்டிலே வந்து விபத்து ஏற்படுத்த முயன்றதற்காக உங்களைச் சார்ஜ்பண்ணியிருக்கிறேன்!"

"சார்ஜ்பண்ணியிருக்கிறீயா!" என்று ஒரு குரல் பின்னிருக்கையிலிருந்து ஏளனமாக ஒலித்தது. காவற்சேகவர் அதைப் பெரிது பண்ணிக் கொள்ளவில்லை.

"எங்கே உங்கள் லைசென்ஸ் எடுங்கள்" என்றார் காவற்சேவகர் வண்டியோட்டியைப் பார்த்து.

வண்டியோட்டி மறுமொழி பகராமல் மௌனமாகவிருந்தான்.

"எங்கே, எடுங்கள் சீக்கிரம்!" திரும்பவும் காவற் சேவகர் கேட்டார்.

"நீ கொஞ்சம் ஒதுங்கிக்க சீக்கிரம்! எங்களை வழிமறித்துத் தொந்தரவு கொடுக்காதே!" என்று பின்னாலிருந்தவரின் குரல் வேடிக்கை கலந்த கடுமையோடு திரும்பவும் ஒலித்தது.

"நானா தொந்தரவு கொடுக்கிறேன்! நீங்கதான் வழியைப் பார்த்து வராமே, ஒழுங்கா வராமே போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்திருக்கிறீங்க. மற்றவங்க உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையிலே நடந்துகொண்டிருக்கிறீங்க!"

"ஐயா, மத்தவங்க உயிருக்காகப் பரிந்து பேசவந்த உயிர்மீட்பாளனே! இப்போ மரியாதையா வழியை விட நீயா, என்ன சொல்றே?"

"லைசென்சைக் காட்டிடுங்க. விட்டுடறேன்!" ஒலியிறங்கிய குரலிற் சொன்னார் காவற் சேவகர்.

"அடச் சீ! என்ன திரும்பத் திரும்ப'வா' பேசறே!—அவன்ட்ரை வரும் இல்லே. அவன் கிட்டே லைசென்சும் இல்லே! பேசாமே உன் வழியைப் பார்த்துக்கொண்டு போ! வம்பை விலைக்கு வாங்காதே!"

"என்னங்க இப்படிப் பேசறீங்க! நீங்க எல்லாம் பெரிய மனிதருங்க. சட்டத்தை மதிச்சி நடக்கவேண்டியவங்க. நீங்களே இப்படிச் சொல்லலாமா? நீங்களே இப்படிப் பேசலாமா?"

"அட, அடே! திரும்பவும் சட்டம் சட்டம் என்று சொல்லிக்கிட்டு நிக்கிறீயே! அதெல்லாம் யார்கிட்டே சொல்லணுமோ, அவங்ககிட்டே சொல்லணுமப்பா! — இப்போ நான் யாருன்னு தெரிஞ்சா நீ இவ்வளவு தூரம் பேசவேமாட்டே! இந்தக்கார் யாருடையதுன்னு தெரிஞ்சா உங்க பெரிய அதிகாரிகள்கூட நடுநடுங்கிப் போயிடுவாங்க. இந்தக் கார் வந்து டெல்லியிலே துணை மந்திரியா இருக்கிற ஒருவருக்குச் சொந்தம். தெரிஞ்சுக்கோ! அந்தத் துணை மந்திரிவந்து எனக்குச் சொந்தம்— மைத்துனன் முறை. இப்போதாவது புரியுதா? இல்லை, இன்னும் சந்தேகமா? சொல்லு. என் பேரை வேணுமானா சொல்லட்டுமா? இல்லே மந்திரிபேரைச் சொல்லட்டுமா?"

காவற்சேவகர் என்ன பதில் சொல்வார்! சற்று நேரம் திகைத்தாற்போல் நின்றுவிட்டு ஓரக்கண்ணால் காருக்குள் உற்றுப்பார்த்தார். அங்கே தென்பட்ட முகத்தை எங்கோ பார்த்ததாக நினைவுவந்தது. 'எங்காக இருக்கலாம்?' அவர் யோசித்தார்.

"உம் உம். வழிவிடு. நாங்கள் சீக்கிரம் போகவேண்டும்!" உள்ளேயிருந்து திரும்பவும் குரல் வந்தது.

காவற் சேவகர் இலேசாக ஒதுங்கிக்கொண்டார். 'உள்ளே இருப்பவர்க்கு வணக்கம் தெரிவித்துக் கொள்ள ஒரு கும்பிடுபோடலாமா? —செச்சே! இந்த மாதிரி சட்டம் ஒழுங்கு, நியாயம் இவற்றை மதிக்காத—அறிந்தும் திருந்தாத— ஒழுங்கு, சட்டம், அவற்றைக் கடைபிடிக்கவேண்டிய முறை இவற்றைப் பற்றி வெறும் வாய்ப்பந்தல்போட்டுக்கொண்டு திரிகின்ற மிரட்டல், உருட்டல்காரர்களுக்கா, சான்றோரை வணங்கும் முறையிலே வணக்கம் தெரிவிக்கவேண்டும்! வேண்டாம், சும்மா ஒரு 'சால்யூட்' போட்டுவைப்போம்! அதைத்தானே இந்த மாதிரி ஆசாமிகள் எதிர்பார்ப்பார்கள்; விரும்புவார்கள்.'

அட்டென்சனில் நின்று காவற் சேவகர் ஒப்புக்கு ஒரு சால்யூட் போட்டார். ஊர்தி கிளம்பிச் சென்றது. திடீரென்று அப்போதுதான் அந்தச் சேவகருக்கு நினைவு வந்தது — உள்ளேயிருந்தவரின் புகைப் படத்தை அவர் செய்தித் தாள்களிற் பார்த்திருக்கிறார். அந்தக் 'கனவான்' சமீபத்தில்தான் வெளிநாட்டுக்குச் சுற்றுப்பயணம் போய்விட்டு வந்திருந்தார் — அரசாங்கச் செலவில், ஏதோ ஒரு தூதுக் குழுவுடன் எதையோ வெளிநாடுகளிற் கண்டறிந்து கொண்டு வருவதற்காக. காவற் சேவகருக்கு நன்றாக நினைவு வந்தது அந்த ஆளின் பெயர், அவர் செல்லுமிடங்களில் மேடையிற் பேசும் பேச்சு முதலியவை எல்லாம். 'ஐரோப்பிய நாடுகளில் சட்டமும், ஒழுங்கும் எப்படி மக்களாலும், ஆளுகையில்இருப்போராலும் கடைபிடிக்கப்படுகின்றன, காப்பாற்றப் படுகின்றன, பேரதிகாரம்கொண்டோராயினும், ஏழையாயினும் எல்லாரும் எப்படிச் சட்டத்தையும்; ஒழுங்கையும் மதித்து நடந்துகொள்கிறார்கள், சட்டத்தின் முன் எல்லாரும் சமம் என்ற நிலை எவ்வளவு சிறப்பாக அங்கே நிறைவேற்றிக் காட்டப்படுகின்றன' என்பனபற்றி எல்லாம் சிறப்புரைகள் ஆற்றிக்கொண்டு திரிபவர்தாம் அந்த ஊர்தியிற் சென்றவர்.

காவல் நிலையம் நோக்கி அந்தச் சேவகர் நடந்தார். நிலைய வாயிலை நெருங்கியபோதுதான் அவர் நினைவுக்கு வந்தது, மிதிவண்டிக்காரர் இருவரும் நடுவழியில் தவிப்புக்குள்ளாக்கப்பட்டுக் கிடக்கின்ற நிலை. அவர் கழிவிரக்கங் கொண்டார். 'பாவம், அவர்களுக்கு ஏதேனும் உதவினால் நன்றாக இருக்கும்' என்ற எண்ணம் அவர் உள்ளத்தே எழுந்தது. சட்டென்று திரும்பி வந்த வழியே ஓரடி எடுத்துவைத்தார். அவ்வளவில் நிலைய வாயிலில் நின்ற காவல் தலைவர் அவர் எண்ணைச் சொல்லி விளித்துவிட்டார். வேறு வழியில்லை. அவர் மறுபடியும் நிலையத்திற்கே திரும்பினார்.

★

# தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்

**4**

ஆணுடைய உள்ளம் இறுகிப்போகிறது; பெண்ணுள்ளம் எப்போதும் உருகி ஓடிக்கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணமே இந்த உலகந்தான். பெண்ணைத் தேடி அவளிருக்குமிடத்துக்கே ஓடுகிற உலகம், ஆண் தன்னைத் தேடி வரவேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறது. ஏதாவது ஒன்றுக்காக இந்த உலகத்தோடு போராடியே தீர வேண்டியிருக்கிற ஆண், அவனையறியாமலே அறிவை வளர்த்துக் கொள்ளுகிறான்; மனதை வளர்த்துக் கொள்ள அவனுடைய மனமே இடங்கொடுப்பதில்லை. அறிவை வளர்த்துக்கொள்ளப் போதுவான அனுபவங்களைப் பெறும் வாய்ப்பே இல்லாது போவதால், பெண் தன் மனதைத்தான் வளர்த்துக்கொள்ளுகிறாள். அதனால்தான் பெண் கற்பனையில் மிதக்கிறாள்; ஆண் காரியமாற்றுகிறான். இது ஒரு விதி; இதற்கு விலக்குகள் இல்லாமல் இல்லை!

விமலாவின் திருமணம் முடிந்து பத்துப் பதினைந்து தினங்கள் கடந்து விட்டன; ஆனால் பத்மாவின் உள்ளம் அன்றிருந்ததைப்போலவே இருந்தது. 'கேரம்' ஆட்டத்தில் பலகையின் ஓரத்தைக் குறிவைத்து அடிக்கப்படும் காய், அதில் மோதி அதிக வேகத்தோடு மறுபுறம் இருக்கும் காயை நகர்த்துவதுபோல, விமலாவின் வாழ்வை வளைத்திருந்த கண்ணன், பத்மாவின் மனதில் படர்ந்திருந்தான். தொத்து நோயைப் போல அவளைப் பற்றிக்கொண்டன கண்ணனைப் பற்றிய நினைவுகள்.

அண்டக்கூடாத அளவுக்குப் பயங்கரமான இடம் சிறைச்சாலை என்றுதான் அவள் அறிந்திருந்தாள். அங்கே அனுப்பப்பட்ட கண்ணன் எந்தவித அவதிகளுக்கெல்லாம் ஆளாகிறானோ என்று எண்ணிக் கலங்கியது அவள் இதயம். அவனை அந்த நிலைக்கு உள்ளாக்கியவள்.... ...விமலா!......அல்ல.....அதில் ஒரு பங்கு பத்மாவுக்கும் இருந்தது. இவள் மட்டும் அன்று விமலாவோடு செல்லாமல் இருந்தால், கண்ணன் கைகளில் விலங்கே ஏறியிருக்காது. ஆனால்......கண்ணன் கைகளில் விலங்கு பூட்டப்படாதிருந்தால் விமலாவின் திருமணம் நடந்தே இருக்காது. நஞ்சுக்காக அஞ்சுவதா அல்லது நாகத்தின் மரணத்துக்காக அனுதாபப்படுவதா என்பதை நிர்ணயிக்கமுடியாமல் தவித்தாள்.

பசியிருந்தது அவளுக்கு; ஆனால் இலையில் சோறெடுத்து வைக்கும் போது இலைமறைந்து சட்டியாகக் காட்சியளித்தது. வாயில் எடுத்து வைக்கக்கூடத் தகுதியற்ற உணவோடு தடுமாறிக் கொண்டிருக்கும் கண்ணன் நினைவு வந்துவிடும் அவளுக்கு அப்போது. தன் அறைக்குள்ளே நுழைந்தால் தேளும் பாம்பும் நெளியும் காற்று வசதியற்ற ஒரு சிறு குகைபோல அது அவளுக்குத் தோன்றும். தூக்கம் வரும்; ஆனால் படுக்கை ஒரு துண்டு சாக்காகத் தெரியும். உலகம் அவளுக்குத் தந்த உருவான பொருள்களையெல்லாம், அவளுடைய உள்ளம் உருக்குலைக்கும் பொருள்களாகவே எடுத்துக்காட்டிற்று.

அவன்மேல் ஏன் தனக்கு இவ்வளவு அக்கரை ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சில நேரங்களில் அவளே நினைத்துப்பார்ப்பாள். அப்போதெல்லாம் அவள் அனுபவிக்கும் வேதனைகளனைத்தும் வேடிக்கையாகத் தோன்றும். அறிமுகமாகும் போதே அண்டுவதற்குத் தகுதியில்லாதவன் என்று கருதப்பட்டவன். அதைத் தொடர்ந்த அவனுடைய நடவடிக்கைகளும் அருவருப்பைத்தான் அவளிடம் உண்டாக்கின. இருந்தாலும் அவனை நினைத்து அவள் உள்ளம் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒருவேளை தனக்கு அவனிடம்.....? இதை நினைக்கக்கூடப் பத்மாவின் மனம் இடங்கொடுக்கவில்லை. புத்தம் புதிய சட்டைகளை அணிந்து வருபவன் புழுதியில் புரண்டுகொண்டிருப்பவனை கட்டித் தவிழுக்கொள்ளவா நினைப்பான்? சீவி முடித்துச் சிங்காரக் கொண்டை போட்டுக்கொண்டிருப்பவள் ஈரையும் பேனையும் எடுத்துத் தலையில் போட்டுக்கொள்வாளா? இவள் மலர்ந்த மலர்; அவன் சிறகொடிந்த வண்டு. அனுதாபத்தால் உருவாகும் பரிவு, எப்படி அன்பில் மலரும் பாசமாகும்?

ஆனால், தணிகாசலம் பிள்ளைக்குத் தன் மகளுடைய மனப்போக்கில் ஏற்பட்ட மாறுதலுக்குக் காரணமே விளங்கவில்லை. பத்மாதான் இதுவரை அவளுடைய தந்தையைப் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறாளே தவிர, அவர் அவளைப்பற்றிக் கவலைப் பட்டதே இல்லை. அதற்கான தேவையும் அதுவரை அவருக்கு ஏற்பட்டதுமில்லை. பட்டுப்பூச்சியைப்போல அவரைச் சுற்றி எப்போதும் வட்டமிட்டுக்கொண்டே இருப்பாள் பத்மா. தொலைவிலே மலர்ந்திருந்தாலும், மலரின் மணம் அருகிலேயே இருக்கிறதல்லவா, அதேபோலத்தான் பத்மா பள்ளிக்கூடம் போயிருந்தாலும் அவளைப் பற்றிய நினைவுகள் அவருக்கு நிம்மதியைத் தரும். ஆனால் சில நாட்களாக அவளிடம் காணப்படும் சோர்வு... எப்போதும் அந்த வீட்டுக்குள்ளே நிறைந்து இருப்பவள், சில நாட்களாக ஏன் தன் அறைக்குள்

ளேயே மறைந்து வாழுகிருள் என் பது புரியாமல் அவர் தவித்தார். விளக்கு எரிகிறது என்ற நம்பிக்கை யோடு வீட்டுக்கதவைத் திறக்க, உள்ளே இருட்டாயிருந்தால்...... சஞ்சலத்தைப்பற்றிக்கூடக் கவலே யில்லே, எத்தனை சந்தேகங்கள் உண்டாகும். அத்தனையும் உருவா கின அவரிடம்.

இன்னெரு சந்தேகங்கூட ஏற்பட் டது அவருக்கு. இளமைக்கும் தனி மைக்கும் பெரும்பாலும் இணைப்பே இருப்பதில்லை. உடலின் வளர்ச்சி தான் மனித உள்ளத்தின் வளர்ச்சி என்று எப்போதுமே இல்லை. சில நேரங்களில் உடல் தளர்ந்த பிறகு தான் உள்ளம் வளரத்தொடங்கு கிறது. தனிமையில் இன்பங்காண உள்ளத்தால்தான் முடியும். சூழ் நிலையால் சுகப்படுத்தப்படுவதுதான் உடல். வயதுவந்த தன் மகளை வாழ்க்கை வருந்தி அழைக்கிறதோ என்று எண்ணினுர்.

“அம்மா! ஏன் ஒரு மாதிரி இருக் கிருய்?” ஒரு நாள் பத்மாவையே கேட்டார்.

“ஒன்றுமில்லே, அப்பா!”

எப்போதும் இளமை இந்தப் பதி லேத்தான் முதுமையின் கேள்விக் குத் தந்து வந்திருக்கிறது. அவரும் ஒருகாலத்தில் இளைஞராக இருந்தவர் தானே!

“நானும் அலேந்துகொண்டுதான் அம்மா இருக்கிறேன். உன் படிப்பு முடிந்ததும்...” வாக்கியத்தை முடிக்க அவரால் முடியவில்லே.

“படிப்பு முடிந்தபிறகு... என்ன அப்பா?”

“எப்போதும் நீ தனியாகவே இருந்துவிட முடியுமா, அம்மா?”

பத்மா புரிந்துகொண்டாள். தன் னுடைய நடவடிக்கைகளின் விளைவு தான் அந்த வினு என்பதை உணர நெடுநேரம் பிடிக்கவில்லேஅவளுக்கு.

“என்னஅப்பா, நீங்களே இப்படிப் பேசுகிறீர்கள்? நான் படித்து முடிக்க வேண்டாமா?”

“அதுதானம்மா நானும் நினைத் தேன்.”

கவலே அண்டக்கூடாத காலத் தில் தன் தந்தையை அதிலேயே ஆழ்த்துகிருேமே என்ற கலக்கம் ஏற்பட்டது பத்மாவுக்கு. எழுந்து தன் தந்தையருகே சென்ருள்.

“என் தவறுதான் அப்பா. மனது என்னவோபோலிருந்தது; தனியாக இருந்தேன். நீங்கள் வேறுவிதமாக நினைத்துவிட்டீர்கள்.” என்ருள்.

பிறந்ததிலிருந்து வளர்ந்த பாசம் இரு இதயங்களிலும் நிறைந்து வழிந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பூங் காவை உருவாக்கியவன் அதில் பூத்த புதுமலர்களைப் பார்ப்பதுபோலத் தணிகாசலம்பிள்ளே பத்மாவைப் பார்த்தார். மலர்ச்சியில் இருந்த பெருமிதம் அவருக்குத் தெரிந்தது. அவர் பார்வை வெளியிட்ட பாசத் தால் பரவசமானுள் பத்மா.

அன்றிலிருந்து பத்மா ஒதுங்கி யிருப்பதைத் தவிர்த்தாள். தன் தந்தைக்கான உதவிகளைக் குறை வறக் கவனிக்கத் தொடங்கினுள். இருந்தாலும் அவள் உள்ளம், ‘என் னேடு சிறிது உறவாடேன்’ என்று தொல்லே கொடுக்கத்தான் செய் தது.

அன்று விமலா பத்மா வீட்டுக்கு வந்திருந்தாள். அவள் தோற்றமே மாறியிருந்தது.

“நாளை ஊருக்குப் போகிருேம், பத்மா” என்ருள்.

ஒருமை பன்மையாக ஒலித்தது கேட்டு பத்மா சிரித்துவிட்டாள்.

“உன்னை இழந்துவிட்டாயா அல் லது மறந்துவிட்டாயா?” என்று கேட்டாள்.”

“இரண்டும் இல்லே. இருவரும் இணைந்துவிட்டோம்” என்ருள் விமலா.

நகைச்சுவைக்குக்கூடப் பருவங் கள் இருக்கின்றன என்பதை எடுத் துக் காட்டின இரு தோழிகளின் அந்தப் பேச்சுகள்.

“எப்போது இங்கே திரும்ப வரு வாய் விமலா” என்று கேட்டாள்.

“ஆற்றிலே விழுந்தவனும், குடும் பத்தில் ஈடுபட்ட பெண்ணும் எப் போதும் ஒண்ணுதான், பத்மா. அவனும் மூன்றுமுறை நீருக்கு மேலே வருவான். என்னையும் மூன்றுமுறை பிறந்த வீட்டுக்கு அழைப்பார்கள்.”

“உள்ளேயே அமிழ்ந்துபோய் விடாதே!”

“எனக்குத்தான் நீந்தத் தெரியுமே பத்மா.”

பன்னீர் தெளிப்பதைப்போல இந்தப் பேச்சுகள் அமைந்தன. விமலா விடைபெற்றுச் செல்லும் போது,

“நாளை ஸ்டேஷனுக்கு நீ வருவா யல்லவா பத்மா” என்று கேட்டாள்.

“அவசியம் வருவோம், நானும் அப்பாவும்” என்ருள் பத்மா.”

மறுநாள் தன் தந்தையை அழைத்துக்கொண்டு விமலாவை வழியனுப்பச் சென்றிருந்தாள் பத்மா. விமலாவின் உறவினர்கள் எல்லாம் வந்திருந்தனர். இரு தோழி களும் என்னென்னவோ பேசிக் கொண்டனர். வண்டி வந்தது. விடைபெறத் திரும்பிய விமலாவின் கண்களில் நீர்த்துளிர்த்தது.

“அழாதே, விமலா!” என்ருள் பத்மா.

“அழுதால் என்ன? கண்ணைத் துடைத்துவிடத்தான் ஆள் இருக் கிறதே” அருகில் நின்ற எவளோ ஒருத்தி கூறினுள்.

எல்லோரும் வண்டியில் ஏறிக் கொண்டனர். ஜன்னலுக்கருகே நின்ற தன் தோழியையே பார்த்துக் கொண்டிருந்தாள் விமலா. ஊதி இழுத்தது இரயில் வண்டி.

“விபசாரி! அவளை விடாதீர்கள்!” என்ற குரல் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். கண்ணன் வண்டியை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். அங்கிருந்த கூட்டமே குமுறிற்று. ஓடிவந்து வண்டியில் ஏறப்போன கண்ணனைத் தடுத்து நிறுத்தினர். பிறகு வழக்க மான அடி, உதை.

இரயில்வே ஸ்டேஷனில் இருந்த கூட்டமெல்லாம் கலேந்தது. பத்மா தன் தந்தையோடு அங்கேயே நின்ருள். ஓரமாக விழுந்துகிடந்தான் கண்ணன்.

“அப்பா! அவரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வாருங்கள்” என்ருள் பத்மா.

“என்னம்மா, இது?” என்று கேட்டார் தணிகாசலம் பிள்ளே.

“காயங்களுக்கு மருந்துபோடக் கூட ஆளில்லேயே, அப்பா. இப் படியே விட்டுப்போனுல் யார்தான் உதவுவார்கள்?”

“உதவுபவர்கள் இருக்கிருர்கள் என்பது தெரிந்தால் உலகத்திலிருக் கிற எல்லோருமே ஒழுங்கு தவறி நடப்பார்கள், அம்மா” என்ருர் அந்தத் தந்தை.

“இல்லே, அப்பா. அவரை விட்டுப் போக எனக்கு மனம் வரவில்லே” என்ருள் பத்மா.

“மனம் என்பதே உன்னிடந் தானம்மா இருக்கிறது. உலகமே ஒதுக்கிவிட்ட அந்தப் பொருளை நீ மட்டும் ஏனம்மாவைத்திருக்கிருய்?”

“அனுதையாகி விடக்கூடாதல் லவா அந்த மனம்! அதனுல்தான் அடைக்கலம் கொடுக்கிறேன். அழைத்து வாருங்கள்” என்று சொல்லி நடந்தாள் பத்மா.

அதற்குமேல்பேசத் தணிகாசலம் பிள்ளேக்கு வழியேயில்லே; கண்ணனை நோக்கி நடந்தார்.

—தொடரும்,

# நாகரிகம்

ஆங்கில மூலம்: C. E. M. ஜோட் ★ தமிழாக்கம்: புதுமைப்பித்தன்

நான்: நாகரிகத்தைப்பற்றி நூல் ஒன்று எழுத முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். நாகரிகம் அடைந்தவர் யார் என்று கண்டு பிடிக்க விரும்புகிறேன். நீ என்ன நினைக்கிருய்?

லூசி: நான் நினைக்கிறேன்....உம்... சரியான ஆடைகளை அணிதல், பஸ்ஸிலே பயணம் செய்தல், கடைகள், கடைகளிலுள்ள பொருட்கள் இவைகளை வாங்கப் போதிய பணம் கொண்டிருத்தல் இவைகளே நாகரிகம் என்று.

நான்: ஆமாம்; குழந்தைகள் சரியான ஆடைகளை அணிகின்றன; திருமதி எக்ஸ் பஸ்ஸில் பயணம் செய்கிருள்; அங்காடியில் பொருட்களை வாங்குகிருள். அக்குழந்தைகளும், திருமதி எக்ஸும் நாகரிக மடைந்தவர்கள் என்று நீ சொல்வாயா?

லூசி: இல்லை, அவர்கள் அதனுல் ஒருக்காலும் நாகரிகம் அடைந்தவர்கள் அல்ல. ஆனுல், அவர்கள் விரும்பினுல் நாகரிக மக்களாக மாறலாம். தற்போது நாகரிகப் பொருட்கள் ஏராளமாக உள்ளன. எவன் ஒருவன் முயற்சி செய்தாலும் நாகரிகம் அடைந்தவன் ஆகலாம்.

நான்: நீ எத்தகைய பொருட்களைக் குறிப்பிடுகிருய்?

லூசி: இயந்திரங்கள், புகைவண்டிகள், தந்தியில்லாக் கம்பி, தொலை பேசி, திரைப்படம் முதலியன.

நான்: நல்லது. நீ சொன்ன பொருட்கள் நாகரிகம் வளர உதவி செய்வன என்பதை நான் துணிந்து சொல்கிறேன். ஆனுல் அவைகளை வைத்திருப்பதாலும், பயன்படுத்துவதாலும் மட்டும் நாகரிகம் அடைந்துவிட முடியாது. நாகரிகம் அடைந்தவர் என்று சொல்லப்போனுல், அதனுல்அவருக்குத் தனித்த சிறப்பு இருக்கவேண்டும். அதனுல் அவர் பெருமைபட்டுக் கொள்ள வேண்டும். புகைவண்டியினுள் நுழைவதில் பெருமை ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உம்......மேலும் ஆராய்வோம். சில நாகரிக மக்களைப்பற்றி நினைப்போம். அவர்கள் நமக்கு ஏதாவது உதவுகிருர்களா என்று பார்ப்போம். நீ நினைக்கும் நாகரிக மனிதர் ஒருவரைச் சொல்லு.

லூசி: ஷேக்ஸ்பியர்.

நான்: ஏன் அவரை நாகரிகமடைந்தவர் என்று சொல்கிருய்?

லூசி: ஏனென்ருல் அவர் பெரிய மனிதர். மக்கள் பெருமைப்படும் படியான நாடகங்களை எழுதியுள்ளார்.

நான்: இப்பொழுதுதான் நம்முடைய விவாதம் சூடுபிடிக்கிறது என்று நினைக்கிறேன். ஆனுல் நீ ஷேக்ஸ்பியரின் நாடகங்களை விரும்புகிருயா?

லூசி: அவ்வளவாக இல்லை.

நான்: பின் ஏன் அவர்களைப் பெரியவர்கள் என்று சொல்கிருய்?

லூசி: ஏனென்ருல்......உம்.....பிற் காலத்தில் அந்த நாடகங்கள் எனக்குப் பிடிக்கும். எப்படியோ வயதுவந்தவர்கள் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை வியந்து பாராட்டுகிருர்கள்.

நான்: ஆமாம். நீ சொல்லும் நாடகங்களைப்போலவே வேறு சிலவும் இருக்கின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப்போலவே படங்கள், இசை ஆகியவைகளை நீ அதிகமாக விரும்புவதில்லை. இருந்தாலும், வயதுவந்த பெரியவர்கள் அவைகளை வியந்து பாராட்டுகிருர்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் நாகரிகத்தின் அறிகுறி என்ருல், அதைப்போலவேதான் ராப்ஹலின் படங்களும், பெத்தோவனின் இசையும்.

லூசி: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இருந்தாலும் நீங்கள் குறிப்பிடும் படங்கள், இசைப் பற்றி நான் அதிகம் அறிந்ததில்லை.

நான்: பிறகு......நாடகங்கள், படங்கள், இசைபோன்ற அழகான பொருட்களை உருவாக்குதல் நாகரிகமடைந்தவர் செயல் ஆகும். ஷேக்ஸ்பியர், ராப்ஹால், பெத்தோவன் போன்றவர்களை நாகரிக மக்களாக எண்ணலாம்.

லூசி: அராபியக் கதைகளில் வரும் தளபதிகள், மன்னர்கள் ஏராளமான பொருட்களையும், அரண்மனைகளையும், பட்டுப்பீதாம்பரங்களையும், நகை நட்டுக்களையும், உண்ணவும், அருந்தவும் அழகழகான பொருட்களையும், இட்ட ஏவலைச் செய்துமுடிக்க அடிமைகளையும் கொண்டிருந்தார்கள். அவர்கள் நாகரிகமற்றவர்களா?

நான்: நிச்சயமாகச் சொல்வதற்கில்லை, அவர்கள் எதை விரும்பினுர்களோ அதை வைத்திருந்தார்கள். எதை விரும்பினுர்களோ அதைச் செய்தார்கள்.

லூசி: சரி. ஏன் அவர்கள்...?

நான்: நீ விரும்பும் ஏதாவது நேர்த்தியான பொருளை நினை.

லூசி: பால்கோவா.

நான்: சரி. ஒருக்கால் நீ பெரிய பணக்காரி என்று வைத்துக் கொள். உன்னிடம் வேண்டிய அளவு பணம் இருக்கிறது. அதைக்கொண்டு ஆயிரக்கணக்கான பால்கோவாவை வாங்க முடியும். ஆனுல், அவைகள் அத்தனையும் தின்ருல் உடல் கெட்டுப்போகாதா?

லூசி: ஆமாம்.

நான்: அதேமாதிரிதான் கவண்கல் வைத்திருந்தாலும்.

லூசி: என்ன சொல்கிறீர்கள்?

நான்: உம்... ஜான் மற்ற எந்தப் பொருளையும்விட கவண்கல்லைத் தான் அதிகமாக விரும்புகிருன். ஆனுல், அவன் ஒருக்கால் பணக்காரனுக இருந்து, தான் கவண் கல்லை அதிகமாக விரும்புவதால் தன் பணத்தைச் செலவழித்து நூற்றுக்கணக்கான கவண்கற்களை வாங்கமுடியும். ஆனுல், அவன் ஒன்று அல்லது இரண்டு கவண்கற்கள் வைத்திருக்கும் போது இருந்த நிலையைவிடச் சிறந்த நிலையை அடையமுடியாது.

லூசி: ஒரே சமயத்தில் ஒன்று அல்லது இரண்டு கவண்கற்களுக்கு மேல் பயன்படுத்த முடியாது என்றுதானே சொல்கிறீர்கள்?

நான்: ஆமாம். மேலும் அவன்

விரைவாகவே கவண்கல் எறிந்த தன் காரணமாகக் களைப்படைவான்.

லூசி: ஆமாம். களைப்புத்தான் அடைவான் என்று எதிர்பார்க்கிறேன். ஆனுல் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

நான்: ஏன் இல்லை? அராபியக்கதைகளிலே நீ படிக்கும் அழகான அரண்மனைகளும், பட்டுப் பீதாம்பரங்களும், அடிமைகளும், இதுபோன்ற பல பொருட்களும், பால்கோவா, கவண்கல்லுக்குப் பெரிய மாற்றுக்கள்; அவ்வளவுதான். கோவேந்தர்களின்குழந்தைகளைப் போலத்தான் மக்கள் பிறக்கிருர்கள். அதிகாரம், செல்வம் இரண்டையும் அடைய வளர்கிருர்கள். பிறகு தங்களுக்குத் தாங்களே, "இப்பொழுது எதை நான் அதிகமாக விரும்புகிறேன்?" என்று கேட்டுக்கொள்கிருர்கள். அது எது என்று கண்டுபிடித்ததும், தங்களால் சிறந்தது என்று தீர்மானிக்கப்பட்டதை அடையத்தங்கள் பணத்தை வாரி இறைக்கிருர்கள்.

லூசி: பிறகு அவைகளினுல் களைப்படைந்து விடுகிருர்கள். அப்படித் தானே?

நான்: ஆமாம். நீ விரும்பிச் சுவைக்கவேண்டிய பொருள் கிடைத்து, அதைச் சிறிது காலம் அனுபவித்த காரணத்தால் அதை நீ மேலும் விரும்பமாட்டாய்.

லூசி: பால்கோவா சாப்பிட்டுத் தெவிட்டிப்போவதுபோல. ஆனுல் எப்பொழுதும் களைப்படைந்தபின் நிறுத்திவிட்டுப் பிறகு மீண்டும் தொடரலாம்.

நான்: அதைத்தான் ரோமர்கள் செய்தார்கள். அளவுக்கு மிஞ்சிய அறுசுவை உண்டார்கள். மேலும் சாப்பிடமுடியாது என்ற நிலை வந்தபோது, தங்கள் உடலைக் கெடுக்கும் பானத்தைப் பருகினுர்கள். பிறகு வயிறு காலியான போது, மீண்டும் தின்ருர்கள். ஆனுல், அதை நான் நாகரிகம் என்று அழைக்கவில்லை. நீ...?

லூசி: இல்லை. நானும் அழைக்கவில்லை.

நான்: பார்க்கப்போனுல் பன்றிகள் கூடப் பின்னுல் உடல் நலம் கெடும் என்று அறியாதபோதிலும், அதைச் செய்கின்றன.

லூசி: மேலும் பன்றிகள் நாகரிக மடைந்தவைகள் அல்ல.

நான்: உம்...... நீ விரும்புவதைப் பெற்று, விரும்பியதைச் செய்யப் பணத்தையும், அதிகாரத்தையும் பயன்படுத்தலாம். அவை கொஞ்சக் காலத்திற்கு அளவு கடந்த மகிழ்ச்சியை அளிக்கலாம், ஆனுல் அதை நாகரிகம் என்று சொல்ல முடியாது. மீண்டும் சொல்லப் போனுல், நாகரிகம் என்பது செல்வத்திலே ஆடம்பரமாகத் திளைப்பது அல்ல. செல்வச் செழிப்பும், அதிகார பலமும் பெற்ற பெரும்பாலான மன்னர்கள் தங்கள் பணத்தையும், அதிகாரத்தையும் இந்த வழியிலேதான் செலவழித்தார்கள். இருந்தாலும் அவர்கள் நாகரிக மக்கள் அல்ல.

லூசி: அராபியக் கதைகளில் வரும் தளபதிகள் விலையுயர்ந்த பொருட்களைத் தம்மகத்தே கொண்டிருப்பது நாகரிகச் செயல் இல்லையா?

நான்:- இல்லை. அப்பொருட்கள் நாம் முன்பு பேசிக்கொண்டிருந்தோமே நாடகங்கள், படங்கள் அவைகளைப்போன்று அழகுள்ளவைகளாக இருக்கவேண்டும்.

லூசி: அழகுள்ள பொருள் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

நான்: எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் நீ எதனுல் களைப்படையமாட்டாயோ, அதுதான் அழகுள்ள பொருள். அழகுப் பொருட்களுக்கு அழிவில்லை. அதாவது அந்தப் பொருட்களை மனிதர்கள் எந்தக் காலத்தும் விரும்புகிருர்கள். ஆனுல், பால்கோவாவின் பெரிய மாற்றுக்கள் அதிக காலம் நிலைக்கமாட்டா. ஏனென்ருல், மக்கள் அவைகளினுல் களைப்படைந்துவிடுகிருர்கள்.

ஆனுல், நாம் சிறிது பின்னேக்கிப் பார்ப்போம். நாம் பேசிக்கொண்டு இருந்தோமே, அந்தக் கடைகள், இயந்திரங்கள், கார்கள் அவை உண்மையில் அழகுப் பொருட்கள் அல்ல. இருந்தும் அவை நாகரிகத்தோடு தொடர்புடையன என்று நாம் எண்ணுகிருேம்.

லூசி: ஆமாம், அது எது என்று நான் அறிகிறேன். அவைகளெல்லாம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. நாகரிக மக்கள் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவார்கள். ஜேம்ஸ் வாட் கெட்டிலைக் கூர்ந்து கவனித்தது—நியூட்டன் ஆப்பிள் கீழே வீழ்வதைக் கண்டது—ஆக இதுபோன்ற செயல்களினுல்தான் தற்போது நாம் பல புதிய கருவிகளைக் கொண்டிருக்கிருேம்.

நான்: ஆமாம். ஆனுல் கண்டுபிடிக்கும் எண்ணம்தான் முக்கியம்; கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் அல்ல.

லூசி: எனக்குப் புரியவில்லை.

நான்: உம்...... கொப்பரையில் நீர் கொதிப்பதை ஜேம்ஸ் வாட்டுக்கு முன்னுல் எத்தனையோ பேர் கண்டுள்ளார்கள். அதேபோல் ஆப்பிள் மேலிருந்து கீழே விழுவதை நியூட்டனுக்குமுன் எத்தனையோ பேர் கண்டுள்ளார்கள். இருந்தும் அவர்கள் ஏதும் கண்டுபிடிக்கவில்லை. ஏன்?

லூசி: சிறப்பாக அவர்கள் எதையும் கூர்ந்து கவனிக்கவில்லை என்று எண்ணுகிறேன்.

நான்: சரியான விடை. ஆனுல், நியூட்டனும், வாட்டும் கூர்ந்து கவனித்தார்கள். இங்கே நாம் சிந்திக்கவேண்டிய கருத்து இதுதான். ஆப்பிள் விழுவதும், கொதிக்கும் கொப்பரையும் புதிய எண்ணங்களை அவர்களிடத்திலே உருவாக்கின. அவர்கள் அம்மாதிரி புதிய சிந்தனைகளை எழுப்பியதால்தான், மனிதர்கள்உலகத்தைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள முடிந்தது. இப்பொழுது நாம் புதிதாகக் கண்டுபிடிக்கும் பொருட்களைப்பற்றி நிச்சயமாகச் சொல்வதற்கில்லை என்ருலும், புதிய சிந்தனையைச் சிந்திக்கத் தூண்டும் இச்செயல் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்தித் தந்தாலும், தராவிட்டாலும் அது நாகரிகத்தின் அறிகுறி என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

லூசி: ஏன்?

நான்: ஏனென்ருல், எல்லாமக்களும் ஒருவர் மற்றவரைப்போலவே சிந்தித்துக்கொண்டிருந்தால் உலகில் எத்தகைய மாற்றமும் நிகழாது.

லூசி: ஒவ்வொருவரும் தங்கள் பெற்ருேர்களைப் போலவே சிந்தித்திருந்தால் நாம் இன்னும் காட்டுமிராண்டிகளாகத்தான் இருப்போம் என்றுதானே சொல்கிறீர்கள்?

நான்: ஆமாம். மக்கள் புதிது புதிதாகச் சிந்திப்பதால்தான் நாகரிகம் தோன்றுகிறது. மேலும் புதிய ஒன்றைச் சிந்திக்கச், சுதந்திரமாகவும் சிந்திக்கவேண்டும்.

லூசி: ஏன் முன்னோர்கள் அப்படிச் சிந்திக்கவில்லை?

நான்: உம்......அவர்கள் சிந்திக்கவில்லை என்பது தெரிகிறது. தங்களுக்குத் தாங்களே சிந்தித்துக் கொண்ட பெரும்பாலான மக்கள் மற்றவர்கள் சிந்திப்பது போலல்லாமல், வேறுபட்டுச் சிந்திப்பது முறை கேடான செயல் என்று போதிக்கப்பட்டது. இப்படி அப்படி என்று சிந்திப்பவர்களைக் கடவுள் தண்டித்து விடுவார் என்று போதிக்க முனிவர்கள் இருந்தார்கள். மக்கள் மதகுருக்களை நம்பினார்கள். கடவுளைக் கண்டு அஞ்சினார்கள். தாங்கள் எதைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டதோ, அதைநினைத்தார்கள். ஒரு சில இடங்களில் மதகுருக்கள் இல்லாவிட்டாலும், தங்கள் சுற்றத்தார் நினைப்பதிலிருந்து வேறுபட்டுச் சிந்திப்பவர்களை மக்கள் எப்பொழுதும் வெறுத்தார்கள். மற்றவர்களிலிருந்து வேறுபட்டு விளங்கும் புதிய பள்ளிப் பெண்களைவிட நீ எவ்வளவு மோசமாக இருக்கிறாய் என்பதை எண்ணிப் பார். பெரியவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். சுயமாகச் சிந்திப்பது என்பது பெரும்பாலும் புதிய சிந்தனையாகவே இருக்கும். மேலே சொல்லப்பட்டவை மக்களைச் சுயமாகச் சிந்திப்பதிலிருந்து தடுத்தன. இருந்தும் சுய சிந்தனையின்றி நாகரிகம் இல்லை என்பதுதான் நாம் முன்பு கண்ட முடிவு.

லூசி:- நீங்கள் சொல்வதைப்போல் சுயசிந்தனை என்பது இன்றியமையாததாக இருந்தும், பெரும்பாலான மக்கள் ஏன் சுயமாகச் சிந்திப்பதில்லை என்று எனக்குப் புரியவில்லை.

நான்: மனிதன் சுயமாகச் சிந்திக்க வாய்ப்பு ஏற்படுமுன் பல முக்கிய பிரச்சினைகள் குறுக்கிடுகின்றன. எடுத்துக்காட்டாக, அவனுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும். எந்தச் சமயத்திலும் தன் உடைமை பறிபோய்விடும் என்றோ, தான் கொலை செய்யப்படுவான் என்றோ நினைக்கும் எந்த மனிதனும் சிந்திக்க அவனுக்கு ஓய்வு தேவை. அவன் தன் கவனம் முழுவதையும் உண்ண உணவு தேடுவதிலும், உடுக்க உடை தேடுவதிலும் செலவிட்டால், அதாவது தன் கால முழுவதையும் உயிரோடு வாழ்வதற்காக மட்டுமே செலவழித்தால் அவனுக்குச் சிந்திக்க ஓய்வு கிடைக்காது. அவனோடு உரையாட மற்றவர்களும் அவனுக்குத் தேவை. ஆகவே, சுய சிந்தனைக்குத் தேவையான பாதுகாப்பு, ஓய்வு, சமுகம் ஆகிய அத்தனையும் நாகரிகத்திற்கும் தேவை.

லூசி: நாகரிகத்தைப்பற்றித் தாங்கள் சொல்ல விரும்புவது அவ்வளவுதானா?

நான்: மேலும் ஒன்று உள்ளது என்று எண்ணுகிறேன்.

லூசி: அது என்ன?

நான்: நல்லவராக இருப்பதுதான்.

லூசி: நல்லவராக இருப்பதற்கும், நாகரிகத்திற்கும் என்ன சம்பந்தம்? நல்லவராக இருப்பதற்கு குழுதான் (சுற்றம், சூழ்நிலை) காரணம்.

நான்: இருக்கலாம். இது பெரியவர்களுக்கும் பொருந்தும். நான் யாரோ ஒருவருடைய குழந்தையைக் கடத்திச்செல்ல விரும்பினாலோ, அக்குழந்தையின் கழுத்தைநெறிக்க விரும்பினாலோ, அதனுடைய காரைத் திருட விரும்பினாலோ, அன்றி அதனுடைய டென்னிஸ் மட்டையைக் கொண்டு விளையாட விரும்பினாலோ, அதை நான் தனியாகச் செய்வதில்லை. அதற்கும் குழுதான் காரணம்?

லூசி: ஆனால், அதற்கும் நாகரிகத்திற்கும் என்ன சம்பந்தம்?

நான்: இதுதான்; நாம் அனைவரும் நாம் விரும்புவதை எடுத்துக் கொண்டாலோ, மற்றவர்குழந்தைகளுடன் ஓடிவிட்டாலோ, அன்றி மற்றவரின் பந்தடி மட்டையைத் திருடிச் சென்றாலோ வாழ்வு தொடர்ந்து நீடிக்காது. ஏதாவது ஒன்றுக்காக நாம் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டும், அடித்துக்கொண்டும் இருப்போம். மேலும் இத்தகைய சூழ்நிலையில் ஒருவரும் புதிதாக ஒன்றையும் கண்டுபிடிக்கமாட்டார்கள். அழகான பொருட்களை உருவாக்கவும் மாட்டார்கள். வாழ்வுமிகப்பயங்கரமாய்விடும். அப்புறம் எங்கும் எவ்வழியிலும் நாகரிகம் இருக்காது.

லூசி: பெரியவர்கள் விதிகளைக் கடைபிடிப்பதும், ஒழுங்காக இருப்பதும் இதற்குத்தானா?

நான்: ஒருவேளை இதுமாத்திரம் காரணமாக இல்லாமல் இருக்கலாம். தெளிவாக எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால், நிச்சயமாக இது ஒரு முக்கிய காரணம். நல்லவராக இருப்பதற்கும் நாகரிகத்திற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கத்தான் செய்கிறது. உங்களுடைய சுற்றத்தாரிடம் நேர்மையாகவும், அவர்களுடைய செல்வங்களை மதித்தும், சட்டங்களுக்குக் கட்டுப்பட்டும் இருப்பது; இன்னும் இதைப்போன்ற செயல்களும் தான் நல்லவராக இருத்தல் என்பதற்குப் பொருள்.

லூசி: என்ன அவை? நல்லவை என்றால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

நான்: நான் இருப்பதுபோல; பெரும்பாலான மக்கள் இருப்பதுபோல இருப்பதுதான் நல்லவை. எப்படியோ நாகரிகமாயிருப்பதற்குத் தேவையான பொருட்களைக் கண்டுபிடித்துவிட்டோம். அழகான பொருட்களை உருவாக்குதல், சுயசிந்தனை, புதிய பொருட்கள்பற்றிச் சிந்தித்தல், மக்கள் நலமுடன் வாழத் தேவையான விதிகளைக் கடைப்பிடித்தல் ஆகியவைதான் அவை. முதலில் சொல்லப்பட்டதைக் கலை என்றும், இரண்டாவது சொல்லப்பட்டதை அறிவியல், தத்துவம் என்றும், மூன்றாவதாகச் சொல்லப்பட்டதை அரசியல், நீதி, மனித நடத்தை என்றும் பெரியவர்கள் அழைக்கிறார்கள். இவைகளால் மட்டும் நாகரிகம் முற்றுப்பெறவில்லை. இருந்தாலும் நாகரிகம் வளர அவை உதவுகின்றன.

★

# இலட்சிய விளக்கு

[ இராகவன் ]

உன் கையிலே ஒளிவிடும் சிறு விளக்கு இருக்கிறது!

மெல்ல ஆடுகின்ற அந்தச் சின்னஞ்சிறு ஒளியிலே உன்னுடைய முகம் மகிழ்வினால், பனிதழுவி விரியும் மலரைப்போல் மலர்ந்திருக்கிறதை என்னால் காண முடிகிறது.

அந்தோ! நீ செல்லும் பாதையிலே முட்களும், செடிகளும், புதர்களும், சேறும் மண்டி இருக்கின்றன!

நீ காட்டிலே பாதையமைத்துக்கொண்டு செல்கிறாய்!

எண்ண முடியாத தொலைநாட்களாக மறைக்கப்பட்ட வழியை, உன் அழுத்தமான காலடி, தடைகளை முறித் தெறிந்துவிட்டுக் கண்டுபிடித்துச் செல்கிறது!

கருத்த மேகத்தை மின்னல் பிளந்து செல்வதைப் போல் உன் காலடிகள் கானகத்தைப்பிளந்து செல்கின்றன!

கானகத்தின் முடிவிலுள்ள உன்னுடைய மாளிகை கண்களுக்கு இலேசாகத் தெரிகிறது!

ஆகா! அது எவ்வளவு பெரிய மாளிகை!

உலகத்தைத் தன் காலடியிலே பார்க்கின்ற இமயத்தைபோல, பன்நெடுங் காலத்திற்கு முன்; உன் மாளிகை மற்றைய மாளிகைகளை இறுமாப்புடன் பார்த்தது!

அகண்டு நீண்டு நான்கு தாழ்வாரங்களிலேயும் அழகு கொஞ்சியது. வீணையின் நாதமும் கலையின் உயிரும் அங்கு துடிப்போடு விளையாடின!

மாளிகை பொலிவும் வனப்பும் பெற்று ஒரு கனவுக் கன்னியைப்போல் தோன்றியது!

ஆயிரமாயிரம் ஒளிச் சுடர்கள் உன் மாளிகையை ஒளியில் ஆழ்த்தின? அது கம்பீரமாக நின்றது. அந்த மாளிகையில்தான் மனிதக் கூட்டத்தின் முதல் கரு தோன்றியது! அந்த மாளிகையில்தான் மனிதனின் நாகரிகம் வளர்ந்தது! அந்த மாளிகையில்தான் பண்பாடும், கலையும், இலக்கியமும் கைகோர்த்துப் புன்னகை புரிந்தன!

உன் மாளிகையுடன் போட்டியிட மற்றப் பெரும் பெரும் மாளிகைகள் அணிவகுத்து முன்வந்தன. ஆனால், அவையாவும் தோல்வியை ஏற்று, உன் மாளிகை முன் சிரம் தாழ்த்தி மண்டியிட்டன!

அது கம்பீரமாக நின்றது!

அந்தோ அந்த மாளிகை இன்று எப்படிக் கிடக்கிறது?

புதர்களாலும், செடிகளாலும், பெரும் பெரும் மரங்களாலும் மறைக்கப்பட்டுப், பொலிவிழந்து ஒளியிழந்து; துக்ககரமான ஒரு விதவையைப்போல் ஏக்கத்துடன் தோன்றுகிறது!

நீ நடக்கிறாய்! உன் காலடிகள் அழுத்தமாகப் பதிகின்றன. கற்களும், முட்களும் உன்னைத் தடை செய்கின்றன. ஆனால், நீ மேலும் நடக்கிறாய்; சிறுவிளக்கை கவிந்துகொண்டு அது அணைந்துவிடாமல் பாதுகாப்பாகக் கொண்டு செல்கிறாய்!

உன் காலின் சதைப் பகுதியில் முட்கள் பாய்ந்து சதையைப் பிளக்கின்றன. உன்னுடைய குருதி நீ வந்த வழி முழுவதும் சிதறிக் கிடக்கிறது!

ஆனாலும், நீ தளர்வில்லாமல் நடக்கிறாய்!

உலகமே உன்னை எதிர்பார்ப்பதைப்போல் தோன்றுகிறது. காற்று 'விர்' என்று வீசுகிறது. புழுதி உன் கண்களை நிரப்புகிறது. கருத்த மேகங்கள் கடகடவென்று சிரிக்கின்றன!

மின்னல் கூத்தாடி உன் கண்ணொளியைக் கவர நினைக்கிறது;

காற்றுச் சதிராடிச் சுழல்கிறது!

மரங்கள் முறிந்து வீழ்ந்து உன் பாதையை மறைக்கின்றன!

வானம் இருளை ஏவி உன்னை அதன் பிடியில் ஆழ்த்துகிறது!

ஆனாலும், தோழனே நீ மேலும் நடக்கிறாய்!

குனிந்து, கவிந்து ஒளியை அணைந்துவிடாமல் கொண்டு செல்கிறாய்!

உன் கண்கள் கருங்குகின்றன, வேதனை ஒலி உன் குரலில் எழும்புகிறது, நெற்றிக் கோடுகள் வளைகிறது, கால்கள் பின்னுகின்றன உடல் சோர்கிறது, இதோ மழையும் உன்னை எதிர்க்க ஆயிரமாயிரம் சாட்டைகளைக் கொண்டு உன்னை மறித்து அடிக்கின்றது!

வானத்தையும் பூமியையும் கானகத்தையும் ஒரு முறை நிமிர்ந்து, சுற்றிப் பார்க்கிறாய்!

அப்பனே! அவை எல்லாம் உன் கையிலுள்ள சிறு ஒளியை, உயிர் ஒளியை அணைக்க முயல்கின்றன;

பரிதாபம்! அவைகளால் அதை அணைக்க முடியாது! அணையாத ஒளி அது!

நீ மேலும் நடக்கிறாய்!

உன் விழிகள் உன் மாளிகையை, இருளை, மழையை ஊடுருவிப் பார்க்கின்றன, அம்மாளிகை மங்கலாகத் தெரிகிறது.

நீ மேலும் நடக்கிறாய்!

நீ நிச்சயமாக, உண்மையாக வெற்றியின் ஆற்றலை இழுத்துக்கொண்டு, அம்மாளிகையை அடையத்தான் போகிறாய்!

பிறகு?

உன்னைத் தடை செய்த ஆற்றல் யாவும் வெட்கித் தலைகுனிய உன் கரத்திலுள்ள சிறு விளக்கால், மாளிகையிலே அணைந்து நிற்கும் சுடர்களை மறுபடி சுடரிடச் செய்வாய்! அந்த ஆயிரமாயிரம் சுடர்களின் ஒளியில்; பழையபடி மாளிகை கம்பீரமும் பொலிவும் அடையும். வீணையின் ஒலியும் கலையின் உயிர்த்துடிப்பும் அங்கு விளையாடும்!

நாகரிகமும், பண்பும், கலையும், இலக்கியமும் புத்துயிர் பெறும்!

வானத்து வெண்முகில் அதைக்கண்டு வியப்படையும்; விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிப் பார்க்கும்; இருள் ஒழியும்!

நண்பனே? நடந்துசெல்! உன் பயணம் இன்னும் முடியவில்லை!

உன்னுடைய மாளிகை உனக்காகக் காத்திருக்கிறது!

சிறு ஒளியாம் திருஒளி ஏந்தி, நீ அக்கானகத்திலே பாதை வகுத்து முன்னேறுகிறாய்!

நீ மேலும் நடக்கிறாய்! நட! நடந்துகொண்டே இரு! நாட்கள் கொஞ்சம் நன்மைகள் எண்ணற்றன. எனவே, ஏக்கம்விட்டு எதிர்நோக்கி நட. ○

# நவீன நல்லதங்காள்!

நவீன நல்லதங்காள்! — இப்படித்தான் தலைப்பிட்டு ஏடுகள் யாவும் அந்தப் பரிதாபத்திற்குரிய பேதையின் வாழ்வைச் சுற்றி வட்டமிட்டன. 'மனிதன் தனக்குதவாவிட்டாலும், ஏதோ ஒருவகையில் பிறருக்கு உதவிக்கொண்டுதான் இருக்கிறான்' என்ற கருத்துக்கு அவள் பொருத்தமாகவே காணப்பட்டாள். இல்லாவிட்டால், தனக்கு என்று ஒரு வாழ்வு இத்தரணியில் இல்லை என்ற எல்லைக்குச் சென்று, வாழ்வின் இறுதியிலே நின்றுவிட்ட பேதையைப்பற்றி நவீனத் தலைப்பிட்டுப்பத்திரிகைகள் நாலு காசைச் சம்பாதித்துவிடும் நிலைபிறக்குமா?

செய்தி என்னவோ உண்மைதான். நவீன நல்லதங்காள் ஆனதும் உண்மைதான். பெற்ற குழந்தைகள் ஏழையும் கிணற்றிலே தள்ளித் தானும் வீழ்ந்து மடியப் போகும்போது, மற்றவர்களின் கண்ணில் பட்டு, இன்று மன்றமேறி நிற்கிறாள்—குற்றவாளியாக — கொலைகாரியாக — தற்கொலையாளியாக— பத்திரிகைகள் அதைக் காசாக்கிக் களிக்கின்றன. பிரித்து வைத்த பலாச்சுளையைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும் ஈக் கூட்டம்போல அவளைச் சுற்றி வருகின்றன பத்திரிகைக் கூட்டம்.

அவள் சாகத் துணிந்து, சாவின் குழியிலே தன் செல்வங்களையும் சரியே, தன்னையும் சரியே வீழ்த்தத் தயாராகும்போதுகூட எண்ணியிருக்கமாட்டாள்; தனக்கு இத்தனை பார்வையாளர்கள் பத்திரிகையின் பெயராலே உருவாவார்கள் என்று. சுவைக்கச் சுவைக்க எதெதையோ தரும் ஏடுகட்கு இதுவும் ஒருபிடி அவலானதில் அதிசயம் ஒன்றுமில்லை.

வழக்குமன்றத்திலே நீதிபதியின் கேள்விகட்கு வாய்திறவாத அவளைத் தாங்கள் வாய்திறக்கச்செய்து அந்த வெற்றியின் பரிசைப் பெற்றுவிடவேண்டும் என்று நிருபர்கள் துடிதுடித்தனர். படம்—தலைப்பு—விளம்பரம் என்ற பெயராலே சொல்லித் தீர்த்தனர் ஏதேதோ. சாவின் சந்நிதானத்திலேபோய் நின்றுவிட்டவளுக்கு சகலமும் ஒன்றுதான் என்று இவர்கள் எப்படி அறிவார்கள். அவள் பேசவில்லை—ஆனால், அவளின் மௌனம் பத்திரிகைகளுக்கு மர்மக்கதைகள் பலவற்றைத் தோற்றுவிக்க உதவியாக இருநதது.

அவள் பெயர்? அதைக்கூட அவள் கூறத் தயாராக இல்லை. எப்படியோ விசாரித்து அறிந்த துப்பறியும் இலாகாவின் உதவியால் அதைமட்டும் அறிந்து வைத்திருந்தனர். செல்லம்—எவ்வளவு செல்லமாக வைத்தனரோ அவளின் பெற்றோர்கள். இன்று சீரழிந்த ஓவியமாய்க் காட்சி தருகிறாள் என்று ஒரு ஏடு அவளின் சிதைந்த வாழ்வுக்கு அனுதாப ஓலமிட்டது. இப்படி

**கரந்தை-கணேசன்**

ஏடுகள் பலப்பல கோணங்களில் அவளுக்காக இரங்கற்பா பாடின. ஆனால்... அவள்...?

தான் கண்ணீர்விடும்பொழுது கவலையேபடாத இந்த உலகம், இன்றுவிடும் அனுதாபக் கண்ணீரைப்பற்றிக் கவலைப்படவே தயாராக இல்லை. அவள் அதை நீலிக்கண்ணீர் என்றே கருதினாள். மனிதன் தன் வாழ்க்கையில் கிடைக்கும் சில அனுபவங்களைக்கொண்டே உலகத்தைக் கணிக்கத் தவறுவதில்லை. அதன் பிறகு அத்தகைய அனுபவங்களில் கிடைக்கும் சில முத்திரைகளை எவராலும் எப்பொழுதுமே மாற்றவும் முடிவதில்லை. தான் பிடிக்கும் தராசில் உள்ள எடைதான் சரியானது என்று வாதிடாத எந்த வியாபாரியையும் உலகில் காணமுடியாது.

அவள் கல்லானாள்—அவள் இதயம் இரும்பாயிற்று — எல்லாமே தூசும் தும்புமாகக் காட்சியளித்தன. எதையும் துச்சமென மதித்தாள்.

வழக்குமன்றத்திலே வாய்தாக்கள் போட்டுப்போட்டு அலுத்துவிட்ட நீதிபதி, வேறு வழியற்ற நிலையில் அன்று மிரட்டிக்கூடப் பார்த்துவிட்டார். 'நீ ஒன்றுமே சொல்லவில்லை என்றால் உன்னைக் குற்றவாளியாகக் கருதி அதற்கான தீர்ப்புச் சொல்லிவிடுவேன்.'

அதற்கு அவள் அளித்த பதில் முகையாகிக் கிடந்த மோகன உகடுகள் சற்றுத் திறந்து மூடிக்கொண்டதுதான். மெல்லச் சிரித்தாள். நான்கே நான்கு மேற் பற்கள் தெரிந்தன. பின்னர் அதுவும் மூடிக்கொண்டது. அந்த மென்னகையின் பொருள்?

நீதிபதிக்கு எதுவும் புரியவில்லை. 'குற்றங்களை ஒப்புக்கொள்கிறாயா?'

'.........' மௌனம்.

'இல்லை என்கிறாயா?'

'.........' மௌனம்.

அதற்குமேல் நீதிபதியின் தலை சுற்றியது வழக்கை மாற்றிப்போட்டு எழுந்து சென்றுவிட்டார்.

காவலர்கள் மிரட்டி உருட்டிப் பார்த்துவிட்டனர். ஒன்றும் நடைபெறவில்லை. தூசுகளின் துகள்களாக இருக்கின்ற சிமெண்டின் மேல் நீர் பட்டவுடன் எப்படிக் கெட்டிப்பட்டு உடைக்கவே முடியாத காங்கிரீட் ஆகிவிடுகிறதோ, அதே போலத்தான் மென்மையான இதயம் படைத்த பெண்மையும் துன்பத்தீயின் அனலால் உருக்கவே முடியாத உருக்காகிவிடுகிறது.

கடைசி முயற்சி, நீதிபதி அவள் இருந்த சிறைச்சாலைக்கே வந்துவிட்டார். அவள் எதிர்பார்த்தே இராத இந்த வரவு சற்று அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. என்றாலும் நிலைமையைச் சமாளித்தவளாய்

அமைதியானுள். அகண்ட வெளியைப் பார்த்தபடியே இருந்தாள்.

நீதிபதியின் கண்களுக்கு அவளின் அதிர்ச்சி சற்று நம்பிக்கையை அளித்தது. இந்தத்தடவை வீசும் வலேயில் இந்த மீன் அகப்படத்தான் செய்யும் என்று எண்ணினுர்.

"அகண்ட வெளியிலே என்னம்மா தேடுகிருய்?'' கேட்டார் நீதிபதி. பேச்சின் துவக்க விழாவைச் சுவையாகவே துவக்கிவிட்டோம் என்றே கருதினுர்.

"........'' மௌனம்.

"அம்மா! செல்லம், இப்படிப்பார், நான் நல்லவன், உனக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். என்னைப் பார் என்ருர் நீதிபதி.

தனக்கென்று உதவவந்தமுதல் மனிதனைப் பார்க்கவேண்டும் என்று கருதினுளோ என்னவோ, நீதிபதி ஒன்றும் இதற்குமுன் அறியாதவர் அல்ல என்ருலும், திரும்பி ஒருமுறை அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

அருகே இருந்த பணியாளன், 'மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திலே ஏறிக்கொண்டது' என்ருன்.

"சும்மா இருடா அதிகப்பிரசங்கி, நீதான் ஏறவைக்கிருய்'' என்ருர் நீதிபதி.

''அவன் ஏறவைத்தால் என்ன? நீங்கள் ஏறவைத்தால்என்ன? நான் வேதாளம்தான் என்ருல் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்ருள் செல்லம்.

திடீரென்று செல்லம் பேச ஆரம்பித்தது நீதிபதிக்கு ஒன்றுமே புரியவில்லே. எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத செயல்கள் எதிர்பாராமலே நடைபெறுகிறபொழுது யாருக்கும் ஒன்றும் புரியாமல் போவது என்பது சர்வசாதாரணமானதுதானே! புதையலேத் தோண்டித் தோண்டி அலுத்துப்போனவன் சலித்துப்போய் 'இனி இக்காரியம் சரிப்படாது' என்று முடிவுகட்டிவிட்ட நேரத்தில் புதையலே அவன் முன்ஞலே கிடந்தால்......அதைப்போல இருந்தது நீதிபதிக்கு. செல்லம்தான் பேசுகிருளா? உண்மையா? உருவாகிவிட்ட இந்தக் கேள்விக் குறிகள் அவரை திக்குமுக்காடச் செய்தன.

அவரின் திணறலே முகக் குறிப்பிலிருந்தே கண்டுகொண்ட செல்லம், 'நான்தான் பேசுகிறேன். அதில் ஏதும் அட்டியில்லே' என்ருள்.

'செல்லம்......' நீதிபதி.

'உங்களின் கேள்விகட்கு நான் பதில் அளிக்குமுன் நான் என்னைப் பற்றிய முழு விவரங்களேயும் கூறிவிடுகிறேன். அவ்வாறு கூறியது போக மீதம் ஏதாவது கேட்கவேண்டும் என்ருல் அப்புறம் கேளுங்கள். அது உங்கட்கும் எளிமை, எனக்கும் எளிமை' என்ருள்.

நீதிபதிக்கோ மேலும் மேலும் ஆச்சரிய அலேகள் மோதி அவரின் சிந்தனைக் கதிர்களேச் சிதற அடித்ததே தவிர, அமைதி பெறுவதாய் இல்லே. இவளா இப்படிப் பேசுகிருள்? சற்று முன்பு வரை மௌன முனியாக இருந்த மாதா இப்படிப் பேசுகிருள்! அதிலும் எவ்வளவு தெளிவாகப் பேசுகிருள்! இவளா தான் பெற்ற குழந்தைகள் ஏழையும் கிணற்றிலே தள்ளி......அவர் ஆச்சரியத்தின் உச்சியிலே நடமாடிஞர்.

'ஐயா! உங்கட்கு மிகவும் அதிசயமாகத்தான் இருக்கும், நான் பேசாமல் இருந்ததையும், இப்பொழுது பேசுவதையும் பார்த்து. என்ருலும் இரண்டும் என்வரையில் ஒன்றுதான். நான் பேசுவதாலே என்ன நன்மை என்று எனக்குத் தெரியவில்லே. என்ன நஷ்டம் என்றும் எனக்குத் தெரியவில்லே. என் குழந்தைகள் அதனலே எழுந்து வந்துவிடப் போவதில்லே. எனக்குச் சூட்டப்பட்ட கொலேகாரி என்ற பட்டம் அழிக்கப்படப் போவதுமில்லே. மேலும் நான் குற்றச் சாட்டுகளிலிருந்து தப்பிவிடப் போவதும் இல்லே.

நான் பேசினுல் என்ன அடைவேனே, அதையேதான் பேசாவிட்டாலும் அடையப் போகிறேன். இப்படி இருக்க ஏன் என்னை 'பதில் சொல், பதில் சொல்' என்று உயிரை வாங்குகிறீர்கள். சொல்வதால், எனக்கு என்ன சுகம் கிடைக்கப்போகிறது' என்ருள்.

நீதிபதி, 'நீ நடந்தவைகளேச் சொல்வதால் உண்மை என்ன என்பதை எங்களால் அறியமுடிகிறது, உண்மை அறிவதால் அதற்கேற்ப நீதி வழங்கமுடியும்' என்ருர்.

'நீதியைப்பற்றிய கவலேயோ, அதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்றஅக்கரையோ எனக்கெதற்கு? அது எக்கேடு கெட்டால் என்ன? நீ உன் குழந்தைகளேக் கொன்ருயா? ஆம். நீயும் தற்கொலே செய்துகொள்ள முயன்ருயா? ஆம். இப்பொழுது சொல்லுங்கள் உங்கள் தீர்ப்பு என்ன? உம்......சொல்லுங்கள் உங்கள் தீர்ப்பு என்ன?' பெண்ணின் மனத்தில் ஆவேசம் எழுந்தால் அது எப்படி ஆர்ப்பரிக்கும் என்பதற்கு அவள் அத்தாட்சியாக' இருந்தாள். பூனைகூடப் புலியாவது உண்டு என்ற பழமொழி உண்மைதான் என்று எண்ண வேண்டி இருந்தது.

நீதிபதிக்கு விசாரணைக் கண் விழித்துக்கொண்டது; 'ஏன் இப்படிச் செய்தாய் என்ருர் சூட்டோடு சூடாக.

'செல்லம், 'அதுவா......? பசி... பசிஐயா...'பசி...போதுமா?' என்ருள். ஆவேசமாக அவளுக்கு இருநூறு கெஜம் ஓடிவந்தவள்போல மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. என்ருலும் விடாமல் பேசினுள். 'என்ன உங்கள் தீர்ப்பு. உம்... சொல்லுங்கள். என்ன உங்கள் தீர்ப்பு?'

நீதிபதி சிரித்தவாறே, 'தீர்ப்பு நாளே கோர்ட்டில்' என்ருர்.

'அப்படியானுல் நான் கோர்ட்டில் சொன்னவைகள்தான் என்வாக்குமூலமாகும். இவைகள் யாவும் செல்லத்தக்கதல்ல' என்ருள்.

அவளின் அறிவு வீச்சுக்கு முன்னுல் நீதிபதி எதையோ இழந்தவர் போல ஆகிவிட்டார். பளிச்சென்ற மின்னல்வெட்டில் கண்கள் பட்டுவிட்டால் சற்று நேரம் இருண்டு விடுவதில்லேயா!

ஒரு பேதைப் பெண்ணின் முன்னுல், அதிலும் தன்குழந்தைகளேயே கிணற்றில் தள்ளிய கொலேகாரியின் முன்னுல் தன் அறிவு வீழ்ந்து போவதை அவர் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்!

'நீ உன் குற்றங்களே ஒப்புக்கொள்கிருய், அதிலும் இதுநாள்வரை மௌனம்சாதித்துக்கோர்ட்டைவேறு அவமதித்திருக்கிருய். அதனுல் எல்லோருக்கும் அளிக்கும் தண்டனே தான்' என்ருர் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு.

செல்லம் சிரித்தாள்......விழுந்து விழுந்து சிரித்தாள். அவளின் சிரிப்பு நீதிபதியின் சித்தத்தைக் கலக்கியது. அருகே இருந்தவர்களேப் பார்த்து, 'இவள்ஒருவேளே...' என்ருர்.

'கவலேப்படாதீர்கள், எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றுதானே அச்சப்படுகிறீர்கள். எனக்குப் பைத்தியம் பிடிக்கவேண்டும் என்ருல், எப்பொழுதோ பிடித்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

திருக்கவேண்டும். அந்தச்சமயத்தை எல்லாம் நான் தாண்டி எவ்வளவோ காலமாயிற்று. கால் வயிற்றுக்கும் அரை வயிற்றுக்கும் சின்னஞ் சிறுசுகளோடு சந்தி சிரித்த காலத்தில் பிடிக்காத பைத்தியம் இப்பொழுது பிடித்துவிடாது.

இப்பொழுது எனக்கு நீங்கள் அளிக்கப்போவது என்ன? தண்டனையா அது? உங்களைப் பொறுத்த வரை அது தண்டனையாக இருக்கலாம். சட்டத்தின் கண்களுக்குக் கிடைத்திருக்கிற ஒரேவழியாகவும் இருக்கலாம். நான் முன்பே சாகத் துணிந்தவள்தானே! நானாகவே சாகத் துணிந்தவளை நீயாகச் சாகாதே என்று பிடித்துவைத்து, இப்பொழுது எதையெதையோ காட்டி நீங்களாகச் சாகச் சொல்கிறீர்கள். இரண்டும் எனக்கு ஒன்றுதான். இரண்டும் சாவுதான். நான் விரும்பியதுதான். தண்டனை என்பது ஒருவர் விரும்புவதைத் தருவதா? விரும்பாததைத் தருவதா? சொல்லுங்கள்ஐயா' என்று நிறுத்தினாள்.

நீதிபதி பேசவில்லை. நன்றாக ஓடிக்கொண்டிருந்த கார் ஓடும்போதே, தனித்தனியாகச் சுழன்று அதன் பகுதிகள் ஓடுவதுபோன்று அவரின் எண்ணங்கள் பகுதி பகுதியாகப் பிரிந்து நிலைதடுமாறின.

அவளே மீண்டும் பேசினாள், 'பெற்ற குழந்தைகள் ஏழையும் கிணற்றிலே தள்ளிய பிறகும் ஒருவள் வாழ விரும்புவாள் என்று கருதுகிறீர்கள். அப்படி யாராவது வாழ விரும்புவார்கள் என்று கருதுபவர்கள் இருந்தால் அவர்களைப்பற்றி என்ன கருதுவது என்றே தெரியவில்லை. ஒருவேளை அவர்களும் சட்டம்போல உயிரற்ற சில கூட்டுச் சரக்குத்தானோ என்று எண்ண வேண்டியவளாக உள்ளேன்.

நீதிபதியின் முகம் சுருங்கி விரிந்தது. அதைக் கண்டவள்,

'ஐயா, உங்கட்கு என்னுடைய சொற்களைக் கேட்க மனம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், சாகத் துடிக்கும் ஒரு உயிரின் கடைசி ஓலம் என்ற நிலையிலாவது என்னுடைய சொற்களைக் கேளுங்கள்' என்றாள்.

'நீதிபதி, 'கேட்கத்தானே வந்திருக்கிறேன், சொல்லம்மா' என்றார்.

'இன்றைய சமுதாயம் பலரின் வாழ்க்கைச் சரித்திரத்தைக்கேட்டுச் சுவைக்கவும்,காலத்தைக்கடத்தவும் விரும்புகிறதே ஒழிய, அதற்கான காரண காரியங்களை அலசிஆய்ந்து அவைகளிலே உள்ள குற்றங்குறைகளைக் களையவோ, மாசு தூசுகளைத் துடைக்கவோ முற்படுவதில்லை. பிறரின் துன்பம் மற்றவர்களின் பொழுது போக்குச் சாதனம் என்றால், சமுதாயம் எப்படி உருப்படும்? அதன் வழியிலே சிக்கிச் சிதைந்து சீரழிந்த ஓவியங்கள்தான் நானும் என் குழந்தைகளும்.

எங்கள் பிறப்பு, வளர்ப்பு, வளர்ச்சி இவைபற்றியவைகள் தேவையற்றன — சுவையற்றன என்பதனால் அல்ல, சராசரி வாழ்வைப் போன்றதேதான் அதுவும் என்பதால்தான். பின்னால், உற்ற கணவனை இழந்தேன், பெற்றோரை இழந்தேன்—பேணும் கடமைவந்தது. கடமையை ஆற்ற முடியாத நிலையில் எனக்குக் கிடைத்த ஒரே வழி—நல்வழி அது தான். இது புதுமையும் அல்ல. என்னைப்போன்ற திக்கற்றோருக்குக் கிடைக்கும் சரியான வழிதான். இதுபோலத்தான் பலப்பல வழக்குகளை முன்பே சந்தித்திருப்பீர்களே, இதில் சிந்திக்க என்ன இருக்கிறது' என்றாள்.

'என்றாலும் கொலை......' என்றார் நீதிபதி.

'இந்த 'என்றாலும்' கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன ஒன்று. நீங்கள் உங்கள் தீர்ப்பை அளியுங்கள். ஆனால், எனக்குள்ள ஒரே எண்ணம் இதுதான். வாழ முடியாதவர்களைச் சாகத் தள்ளும் சமுதாயம். சாகச் சென்றாலும் சாகவிடாமல் தடுத்து நிறுத்தி, பின்னாலே சாக அடிக்கிறதே. பார்க்கப்போனால் எல்லாம் ஒன்றுதானே! இதற்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் எல்லாம்.சாகும் போதுகூடவா சந்தி சிரித்துச் சாக வேண்டும்?' என்றாள் செல்லம்.

நீதிபதியின் கண்களிலிருந்து கண்ணீர் கரை புரண்டது. 'செல்லம் உனக்காக நான் பெரிதும் அனுதாபப்படுகிறேன்' என்றார்.

'கவலைப்படாதீர்கள் ஐயா! என் போன்றவர்களை மேலும் வளரவிடாமல் களைந்து எரியுங்கள். அதற்கான வகை காணுங்கள்' என்றாள்.

'சரியம்மா......ஆனால், உன்னைச் சட்டப்படி...'

'இவ்வுலகத்திலிருந்து விடுதலை தாருங்கள்' என்றாள்.

நீதிபதி எழுந்து திரும்பிப் பாராமலே வேகமாக வீடுநோக்கி நடந்தார். அவரின் மனத்தில் ஏதோ ஒரு உறுதி உருவாகிவிட்டது போன்று காணப்பட்டது. கர்ம வீரன் ஒருவன் தன் கடமையைத் தவறாது ஆற்றச் செல்லும் நிலை தென்பட்டது. சென்ற வேகத்தில் தோள்மீது மடித்துப் போட்டிருந்த நீதிபதிக்குரிய அங்கி நழுவிக் கீழே விழுந்ததைக்கூட அவர் அறியவில்லை. பின்னால் சென்ற பணியாளன் அதனை எடுத்துக்கொண்டு அவர் பின்னே சென்றான். ○

## அடுத்த இதழ்

மாநில மாநாட்டை முன்னிட்டு 16—7—61-ல் வெளிவரவேண்டிய "திராவிட நாடு" இதழ் நிறுத்தப்பட்டு, 23—7—61-ல் தொடர்ந்து வெளிவரும் என்பதை விற்பனையாளர்கட்கும், வாசகர்கட்கும், தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.